401

# ஜகன்மோகினி



FEB 1943
401
3L
ווזייו M122.
N142.19.12
183074

த்லைவ்யம்
(தொடர்ச்சி)

அ 2 ணு

டிசம்பர் '42
கார்த்திகை

வை. மு. கோதைநாயகி அம்மாள்

வருட சந்தா ரூ. 1/8/0. தனிப் பிரதி அணு 2.

டிசம்பர் 1942 விஷய அட்டவணை சித்திரபானு கார்த்.

மலர் 19. இதழ் 12


| | | |
|---|---|---|
| 7. "ஆடுக, ஆடுகவே!" | பி. ஸ்ரீ. | 1 |
| கார்த்திகை தீபம் கண்கொள்ளாக் காக்ஷி | "குகப்ரியை" | 6 |
| பாரதநாட்டு திலகங்கள்-12. ஸ்ரீ கல்யாணி சாஸ்திரி | வை. மு. கோ. | 10 |
| க்ஷேமலாபங்கள் | ,, | உள் அட்டை |
| வாத்ஸல்யம்-59-வது நாவல்(தொடர்ச்சி) | வை. மு. கோ. | 129-160 |


மேலட்டை படம்: ஸ்ரீமதி கல்யாணி சாஸ்திரி

# க்ஷேம லாபங்கள்

அன்புடையீர்!

## சந்தோஷச் செய்தி

பரம க்ருபாநிதியாயும், பக்தவத்ஸலனுயும் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபார்த்தஸாரதியின் அருளாலும், உங்களுடைய பேராதரவாலும் நமது மோகினிச் செல்விக்கு இந்த டிஸம்பர் மாதத்துடன் 19 வருடங்கள் பூர்த்தியாகி, அடுத்த ஜனவரி மாதத்தில் 20-வது வருஷம் ஆரம்பமாகிற சந்தோஷத்தை உங்களுடன் நானும் பங்கிட்டுக்கொள்கிறேன்.

## வந்தனம்

நமது மோகினியின் 20-வது ஆண்டுமலருக்கும், புதிய வருஷத்திற்கும் அன்பர்கள் ஏராளமாக உத்ஸாகத்தைக் காட்டி ஆதரவளித்து வருவதற்கு நான் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

## ஆண்டு மலர்

இந்த பேப்பர் பஞ்சகாலத்தில் ஆரம்பித்துள்ள இம் மலர் உங்கள் அன்பினுல் புஷ்பிக்கின்றதேயன்றி வேறில்லை. மோகினியின்பாலுள்ள அளவுகடந்த அன்பினுல் பல சகோதர சகோதரிகள் சிறு கதைகளேயும், வியாஸங்களேயும் தாமாகவே எழுதியனுப்பி எம்மை மகிழ்வித்ததற்காக எமது வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

மலரின் வேலை வெகு மும்முரமாக நடந்து வருகிறது. ஏராளமான கட்டுரைகளும், சிறு கதைகளும், வியாஸங்களும், காவியங்களும், வாழ்த்துக்களும் எதிர்பார்த்த அளவுக்குமேல் குவிந்து, எல்லாம் பொருக்கு மணிகளாக இருக்கின்றன. எனினும் எதை போடுவது, எதை விடுவது என்ற பேப்பர் பஞ்சத்தின் கொடுமை எம்மைத் தவிக்கச்செய்கிறது. கூடுமானவரையில் பிரசுரிக்க முயற்சிக்கின்றேன். மலருக்கென்று அனுப்பியுள்ள கட்டுரைகளில் இடமின்றி விட்டுப்போனவற்றை மோகினி இதழில் பிரசுரித்துவிடுவோம்.

இன்னெரு முக்ய விஷயம். ஒவ்வொரு வருஷமும் நமது மோகினியில் புதிய கதை ஆரம்பிக்கும் வழக்கம்போல் இவ் வருஷம் ஆரம்பிக்கமுடியவில்லை. இப்போது வரும் நாவலாகிய வாத்ஸல்யம் புது வருஷத்திலும் தொடர்ந்து வரும். "புது வருஷம் பிறக்கப்போகிறதே, அதற்காக கதையைக் குறைத்து, சுருக்கிவிடுவீர்களா என்ன?" என்று பல அன்பர்கள் இதற்குள் கடிதம் எழுதியிருக்கிருர்கள். கதையின் ஸ்வாரஸ்யத்தை சுருக்கவும், குறைக்கவும் நானும் விரும்பவில்லை.

ஸ்ரீராமஜயம்.

# ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
-திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து
-[illegible] கவி.

OFFICE OF THE REGISTRAR OF ...
20 FEB 1943

மலர் 19 | சி[illegible]பானுவருஷ கார்த்திகை டிசம்பர் 1942 | இதழ் 12




பி.ரு

## (ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்)

### 7. 'ஆடுக, ஆடுகவே!'

கண்ணன் பிறந்த அஞ்சாமாசம், தலையை நிமிர்த்துக்கொண்டு இங்கும் அங்கும் அசைந்து அசைந்து ஆடுகிறது குழந்தை. தாயாருக்குக் காணாத அற்புதம் ஒன்றைக்கண்டதுபோலிருக்கிறது. "எல்லாக்குழந்தைகளும் இப்படித்தானே விளையாடும்!" என்று அது அவ்வளவு சாதாரணமாய்த் தோன்றவில்லை. மேலும் மேலும் அந்த விளையாட்டைப்பார்த்து ஆனந்திக்கவேணுமென்று தோன்றுகிறது:

செல்வு பொலிமகரக் காது திகழ்ந்திலக,
ஐய! எனக்கொருகால் ஆடுக செங்கீரை;
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே!

[செல்வு-செல்வம். பொலி-பொலிகின்ற. செல்வு பொலி-செல்வத்திற்கு அறிகுறியான. மகரக் காது-மகர குண்டலங்களோடு கூடின காதுகள். திகழ்ந்து இலக-மிகவும் விளங்க. ஐய-ஐயனே; அழகனே. ஒரு கால்-ஒரு விசை. செங்கீரை-குழந்தைப் பருவத்து

விளையாடல்களில் ஒன்று. ஆயர்கள்-இடையர்கள். போர் ஏறே-போர் செய்ய நின்ற ராஜ சிம்மம் போன்றவனே.]
என்று பாடுகிறாள்.

## ஆடும் அழகு

கிருஷ்ணன் இரண்டு கைகளையும்முழங்கால்களையும் ஊன்றித் தலை நிமிர்ந்ததுமே, யசோதையின் உத்ஸாகத்திற்கு அளவில்லை. அப்படித் தலை நிமிர்ந்து ஆடும்போது, குழந்தையின் காதுகளிலுள்ள மகர குண்டலங்கள் பளிச்சுப் பளிச்சென்று மின்னுகின்றன. ஆயர் கோனும் தன்னுடைய கணவனுமாகிய நந்தகோபனுடைய செல்வத்தின் அறிகுறியான குண்டலங்கள். ஆனால் இந்தக் குண்டலங்கள் கண்ணனுடைய காதுகளை அலங்கரிக்கின்றனவா? அல்லது இந்த அழகிய செவிகள்தான் குண்டலங்களுக்கு அழகு தந்து அவற்றைச் 'செல்வம் பொலி'யும் குண்டலங்களாகச் செய்துவிடுகின்றனவா? இந்தச் சந்தேகங்கள் யசோதைக்கு ஏற்படவேயில்லை, ஆபரணங்களுக்கும் ஆபரணமான குழந்தைக் கண்ணனின் குதூகலத்தையும் விளையாட்டையும் கண்குளிரக் கண்டு வாய்குளிரப் பாடிக்கொண்டிருக்கும்போது.

"எனக்காக ஒருதரம் ஆடவேணும், ஆடவேணும்!" என்று உளம்குளிரச் சொல்லிச் சொல்லி அந்த விளையாட்டிலேயே அதிசயமாக ஈடுபட்டு,

ஐய! எனக்கொருகால் ஆடுக!

என்றும்,

அம்ம! எனக்கொருகால் ஆடுக!

என்றும் கொஞ்சிக்கொண்டேயிருக்கிறாள்.

சில சமயங்களில், "ஆனை! ஆனை! அழகர் ஆனை!" என்று குழந்தையை மடியில் வைத்துத் தாமே ஆட்டி மகிழும் தற்காலத் தாய்மார்போல் யசோதையும்,

ஆனை! எனக்கொருகால் ஆடுக செங்கீரை;
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே!

என்று கொஞ்சிக்கொண்டே கண்ணனை ஆட்டிக்கொண்டிருக்கிறாள்.

கண்ணன் ஆடும்போது, தலையின் முன்புறத்திலே நெருங்கிச் சுருண்டு தொங்கும் ரோமம் தாழ்ந்து அசைந்தாடுகிறது. தாயார் ஆட்டும்போது குழந்தைக்கும் உத்ஸாகம்தான். அந்தப் புன்னகையைக் கண்டதும் (அம்மா) அப்படியே பூரித்துப் போகிறாள். அந்தப் புன்னகைக்கு எந்தக் குண்டலம்—வேறு எந்தப் பொன்னகை, எந்த இரத்தின ஆபரணம்தான்—ஈடாக முடியும்? எந்த முத்துக்குத்தான் இந்த அழகு, இந்த இனிமை உண்டு? இத்தகைய அழகை அப்படியே அனுபவித்துப் பாடி,

முத்தின் இளமுறுவல் முற்ற வருவதன்முன்
முன்னம் முகத்(து)அணிஆர் மொய்குழல்கள் அலைய,
அத்த! எனக்கொருகால் ஆடுக செங்கீரை;
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே!

[இளமுறுவல்-புன்சிரிப்பு. ஆர்-நிறைந்த. மொய்குழல்கள்-நெருங்கிய-சுருண்டரோமங்கள். அத்த-அப்பனே.]
என்று குழந்தையை ஆட்டிக் கொண்டிருக்கும்போது, யசோதையின் இன்பம் கொஞ்சமோ?

## தாயின் சொர்க்கம்

"இன்னும் இளநகை முற்றவில்லை; முத்துப்போன்ற பற்கள் தோன்றும்படி சிரிக்கத் தெரியவில்லை; அதற்கு உரிய பருவமாகவில்லை!" என்றெல்லாம் தனக்குத் தானே சொல்லிக்கொண்டு அந்தப்புன்னகையிலே சொக்கிப்போகிறாள். அந்த மோகத்திலே,

அப்ப! எனக்கொருகால் ஆடுக செங்கீரை;
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே!

என்று கொஞ்சிக் கொஞ்சி ஆட்டிக்கொண்டிருக்கும்போதே, கிருஷ்ணனுக்கும் உத்ஸாகம் அதிகப்படுகிறது. இளநகை அப்போதே அதிசயமாக முற்றி வளர்ந்து கொஞ்சம் பெருநகையாவது போலத் தோன்றுகிறது. அப்போதுதான் முளைத்த சில பற்கள் தோன்றச் சிறிது வாய் திறந்து சிரிக்கிறான் கண்ணன்.

யசோதை அந்தச் 'சில பற்களை'த்தான் கண்டாளா? சொர்க்கத்தையே கண்டுவிட்டாளா? கேளுங்கள்:

கோல நறும்பவளச் செந்துவர் வாயினிடைக்
கோமள வெள்ளிமுளை போல்சில பல்இலக,
நீல நிறத்(து)அழகார் ஐம்படை யின்நடுவே
நின்கனி வாய்அமுதம் இற்று முறிந்துவிழ,
ஏலும் மறைப்பொருளே! ஆடுக செங்கீரை;
ஏழுலகும் உடையாய்! ஆடுக, ஆடுகவே!

[கோலம்-அழகு. நறும்பவளம்-நற்பவளம். செந்துவர்-அழகாய்ச் சிவந்திருக்கிற. கோமளம்-இளமையான. இலக-இலங்க. அழகு ஆர்-அழகு நிறைந்த. ஐம்படை-குழந்தைகள் கழுத்தில் அணியும் (விஷ்ணுவின் பஞ்சாயுத உருவம் அமைந்த) ஒருவகை அணி. கனிவாய்-கனிபோன்ற வாய். ஏலும்-தகுதியான. மறைப்பொருளே-வேதப்பொருளே.]
என்று தாயார் பாடுவதை,

என்ன அழகான குழந்தைச் சித்திரம், பாருங்கள்! பவளம் போன்ற உதடுகளுக்கிடையே கோமளமான வெள்ளி முளைபோல் சில பற்கள் இலங்குகின்றனவாம், கண்ணன் சிறிது வாய்திறந்து சிரிக்கும்போது. 'பவளத்திற்கிடையே வெள்ளி யரும்புகள்!' என்று வியக்கும்படி விளங்குகின்றன அந்தச் சிறு பற்கள். அந்தப் பற்கள் தோன்ற அப்படிப் புன்சிரிப்பு வரும்போது, வாயில் ஊறும் நீர் இற்று இற்று விழுகிறதாம் அமிர்த தாரை விழுவதுபோலே. சாளை வாய்; என்று சொல்லுகிறோமே, அது மற்றக் குழந்தைகளுக்குத் தானே! நம்முடைய குழந்தையின் வாய் நீர் அமிர்தமல்லவா? என்பது தாயின் மனநிலை. யசோதையோ, பவளத்திற்கிடையே அற்புதமான வெள்ளி யரும்புகளையும் அமிர்தத்தையும் அதிசய

யாய்க்கண்டு, அந்த அமிர்ததாரை நீலமார்பில் ஆபரணங்களின்மீது இற்று இற்று விழுவதையும் கண்டு, இந்த உலகத்தையே மறந்து விடுகிறாள்.

'தாய் காணும் சொர்க்கம்!' என்று சொன்னால், இந்த யசோதைத் தாய்க்குப் போதாது. 'இது தாய் உடம்போடு காணும் பேரின்பம்—பரமபதம்!' என்றே சொல்லிவிடலாம். அதனால்தானே,

ஏலும் மறைப்பொருளே! ஆடுக செங்கீரை;
ஏழுலகும் உடையாய்! ஆடுக, ஆடுகவே

என்று பாடுகிறாள் யசோதை.

## இந்தத் தாய்க்கும் இந்தப் பைத்தியமா ?

"ஆபரணங்களுக்கெல்லாம் ஆபரணமான திருமேனி! இதற்குப் பொன்னகை வேண்டாம்; புன்னகையே போதும்!" என்பதெல்லாம் யசோதைக்குத் தெரியும்; நன்றாய்த் தெரியும். எனினும் தாயின் சபலம் இந்தத் தாய்க்கும் வந்துவிடுகிறது. எனவே, காதில் அசைந்தாடும் குண்டலங்களுடன் திருப்தி வரவில்லை. மார்பில் அசைந்தாடும் (ஐம்படைத்)தாலி' என்ற அந்த ஆபரணத்துடனும் திருப்தி வந்துவிடவில்லை. நகைப் பெட்டியைத் திறந்து ஆபரணங்களையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக் குழந்தைக்குப் பூட்டிப் பார்க்கிறாள்—அழகை விலங்கிட்டுப் பூட்டி வைப்பதுபோலே!

ஏழுலகங்களுக்கும் பொது உடைமையான பேரழகை,—வேதப்பொருளான 'அழியா அழகு, என்ற தத்துவத்தை,—தங்கள் குடிக்கே சொந்தமாகக் கருதி 'எங்கள் செல்வம் இது!' என்று பூட்டிவைத்து விளம்பரப்படுத்தும் சபலத்தை இதோ பாருங்கள் :

செங்கமலக் கழலில் சிற்றிதழ் போல்விரலில்
சேர்திகழ் ஆழிகளும் கிண்கிணியும், அரையில்
தங்கிய பொன்வடமும், தாளநன் மாதுளையின்
பூவொடு பொன்மணியும், மோதிர மும்கிறியும்
மங்கல ஐம்படையும், தோள்வளை யும்,குழையும்,
மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்திலக,
எங்கள் குடிக்கரசே! ஆடுக செங்கீரை;
ஏழுல கும்உடையாய்! ஆடுக, ஆடுகவே

[செங்கமலக் கழலில்-செந்தாமரைப் பூப்போன்ற அடிகளில். சிற்றிதழ்-சிறு+இதழ்-(அந்தச் செந்தாமரைப் பூவின்) சிறிய உள் இதழ். சேர்திகழ்-சேர்ந்து திகழும். ஆழி-ஒருவித மோதிரம். கிண்கிணி-சதங்கை. தாள-தாள் அல்லது காம்பு உள்ள. மாதுளையின் பூ-(இங்கே) மாதுளம்பூக் கோவை என்ற ஆபரணம். கிறி-மணிக் கட்டில் அணியும் சிறிய பவளவடம் குழை-காதணி. மகரம்-மகர குண்டலம். வாளி-காதுமடல்மேல் அணியும் ஒருவகை அணி. சுட்டி-நெற்றிச்சுட்டி.]

செந்தாமரைப் பூவில் சிறிய இதழ்கள் போலவே தோன்றுகின்றனவாம் கண்ணன் அடிகளில் சிறு விரல்கள். அந்த விரல்களுக்கும் நகை வேணுமா? செந்தாமரைப் பூவுக்கும், அதன் சிற்றி

தழ்களுக்கும் அணிசெய்து அழகை அதிகப்படுத்த முடியுமா? யசோதை தெரியாதவளா? எனினும் அந்தப் பாதங்களுக்கும் விரல் களுக்கும் அணிகள் பூட்டினள். பாதச் சதங்கைகளோடு அரைச் சதங்கை—அரைநாண். கைவிரல்களுக்கு மோதிரங்கள். மணிக் கட்டுக்குச் சிறுபவளவடம். தோளுக்கு வளைகள். ஐம்படைத் தாலியென்ற மங்கள ரட்சையான நகையோடு, மாதுளம் பூக் கோவை, பொன்மணிக் கோவைகள். காதில் குண்டலங்களோடு வேறு காதணிகள்: காதுமடலுக்குக்கூட அணிகள். நெற்றிக்குச் சுட்டி. போதுமா? நகைப்பைத்தியம் இன்று நேற்று ஏற்பட்டதா? யசோதை குழந்தைக் கண்ணனை அப்படியே நகையால் மூடிவிட்டாள்!

ஆனல் அந்தத் திவ்ய அழகை அப்படியெல்லாம் மறைத்து விடமுடியுமா? அந்தத் திவ்ய மேனியைச் சார்ந்து ஆபரணங்க ளெல்லாம் திவ்யாபரணங்களாகிவிட்டனவாம். அதனுல்தான்,

மங்கல ஐம்படையும், தோள்வளை யும்குழையும்,
மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்திலக,
எங்கள் குடிக்கரசே! ஆடுக செங்கீரை;
ஏழுல கும்உடையாய்! ஆடுக, ஆடுகவே

என்று பாடி உருகிக் குழந்தையை ஆட்டுகிருள்.

ஆபரணங்களெல்லாம் ஒத்து இலங்குகின்றன என்று திருப்தி யடைகிருள் யசோதை. அழகை அதிகரிக்கச் செய்து பார்ப்பதில் மற்றத் தாய்மார்களுக்கு ஆசை: இந்தத் தாய்க்கோ அழகை மறைத்துப் பார்ப்பதில் திருப்தியா? ஆனல் மற்றப்படி, கண் கொண்டு முற்றும் காணமுடியுமா கண்ணன் கட்டழகை? 'ஏழு லகும் உடைய'—மறைகளும் எழுதிக் காட்டமுடியாத—அழகல் லவா? அந்த அழகை ஆபரணம் பூட்டி அன்பால் கட்டுப்படுத்தும் யசோதை,

எங்கள் குடிக்கரசே! ஆடுக செங்கீரை;
ஏழுல கும்உடையாய்! ஆடுக, ஆடுகவே

என்றெல்லாம் ஆட்டிவைக்கிருள்.

தூய நடம்பயிலும் சுந்தரா! என்சிறுவா!

என்றும், 'என் கன்றே' என்றும் எவ்வளவு சொந்தம் பாராட்டி ஆட்டி வைக்கிருள்!

## ஆட்டிவைக்கும் அழகு

ஆனல் இவளையும் பிறரையும், எல்லாவுலகங்களையும் ஆட்டி வைக்கும் பிள்ளையல்லவா அது? எனவே, யசோதையாக நடிக்கும் பெரியாழ்வார் அந்தப் பிள்ளையை 'ஏழுலகும் உடையாய்!' என்றும், 'மறைப் பொருளே!' என்றும், 'வெண்ணெய் உண்பதுபோல் மண்ணையும் வயிற்றில் வைத்துக் காக்கும் அப்பனே! அம்மையே!' என்றும், 'ஆத்மாக்களாகிய மாடுகளையெல்லாம் மேய்க்கும்

ஆயனே! மாயனே!' என்றும் பொருள்படப் போற்றுகிறார், இந்தப் பதிகத்திலே.

"எனக்கு ஒருகால் ஆடுக" என்று பிரார்த்தித்த யசோதைக்கும், தாயன்பு பூண்ட ஆழ்வாருக்கும் அருள்செய்த கண்ணனே நம்மையும் ஆட்டிவைக்கிறான்; நமக்கும் விளையாட்டுக் காட்டுகிறான். ஆம்; இந்த யுத்த பயங்கர இரவிலும்கூட. ஆம், ஆம்; இந்த நிலையிலும் அன்பு-நெறியில் நிற்பவர்களுக்கு அழகன் அருள்செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறான்!

தாயார் அன்று 'ஆனே! ஆனே!' என்று ஆட்டும்போது கைக்கும் கங்கணம் கட்டினாள். "இந்தக் கங்கணம் அழகிற்கா? அன்பர்களை ரட்சிக்கத்தானே!" என்று கள்ளக் கிருஷ்ணன் அப்போதே நினைத்திருப்பானல்லவா?

---

## குகப்ரியை கார்த்திகை தீபம் கண்கொள்ளாக் காட்சி

எல்லா மாதங்களையும்விடக் கார்த்திகை மாதத்திற்கு ஒரு தனிச்சிறப்பு. ஏன்? பல பழமொழிகள் இம் மாதத்தை அலங்கரிக்கின்றன. சரத்ருதுவின் சிலிர்சிலிர்ப்பு, பனி பெய்தும் பெய்யாமலுமிருக்கும் ஒரு நிலை. இவைகள் உடலுக்கு ஆரோக்யமில்லாவிடினும் மனதிற்கு மகிழ்வூட்டுகின்றன. இம் மாதத்தின் சீதோஷ்ண நிலை ஒரு எல்லையில் அடங்குவதில்லை. இதுபோலவே இம் மாதத்தைப்பற்றிய பழமொழிகளும் ஒன்றுக்கொன்று நேர் மாறாகவுமிருக்கின்றன.

புரட்டாசி பொன்னுருகக்காயும், ஐப்பசி மண்ணிறுகப்பெய்யும் கார்த்திகை பிறத்தால், கால்கோடை என்பது ஒரு பழமொழி. மழை அதிகமாய்ப் பெய்தால், உடனே ஐப்பசி அடைமழை. கார்த்திகை கனமழை, என்பார்கள். பெய்யாவிடில், கார்த்திகைக்குப்பின் மழையுமில்லை, கர்ணனுக்குப்பின் கொடையுமில்லை. என்ற பழமொழி உவனமக்குவரும், யாராவது ஒருவர் அபூர்வமாக வந்தால் உடனே 'ஏதேது கார்த்திகைப் பிறைபோலிருக்கிறதே!' என்று குறிக்கிறோம். கார்த்திகை மாதம் கலம்கழுவப் பொழுதேது என்கிறாள் பாட்டி. பகல்பொழுது குறைவு என்கிற விஞ்ஞான விந்தையை விளக்குகிறது இந்த முதுமொழி. இப்படி எண்ணிறந்த பழமொழிகளால் அலங்கரிக்கப்படுகிறாள் கார்த்திகைப்பெண்.

கார்த்திகை என்ற உடனே கார்த்திகேயன் நினைவுதான் முன்னே வருகிறது. முருகனடியார்களுக்கு பிரதிமாதமும் கார்த்திகை விழாதான். அதிலும் கார்த்திகை மாதத்துப் பூர்ணிமையில் சந்திரனும் ரோகிணியும் அதையடுத்துக் கார்த்திகைப் பெண்களும்வான வீதியிலே உலாவிவருவார்கள். சூரனைக்கொன்று வாகைசூடிய குழந்தைக் குமரனுக்கு விடாயாற்றி மகிழ்விக்கிறார்களாம் இந்த தாரகைப் பெண்கள், கந்தசஷ்டி உற்சவத்தின் சிரமம் தீரும்பொருட்டு தேவர்கள் இந்தப் பூர்ணிமையில் பூசிப்பதாகவும் சொல்வதுண்டு. முருகன் அடியார்கள் இந்த வெற்றியைக் கொண்டாடுவதன் பொருட்டு உபவாஸமிருந்து பூஜிப்பார்கள்.

"இதென்ன இது, ஒரே அக்கினிப்பிழம்பு. இதற்கு அடியா? முடியா? ஒன்றுமே தெரியவில்லையே, ஒரே ஜோதியாய் விண்ணுக்கும் மண்ணுக்குமாய் நிற்கின்றதே மலைபோல' என்று எண்ணியவராய் நிமிர்ந்து பார்த்துத் திகைத்தார் பிரம்மதேவன். அதேசமயத்தில் எங்கிருந்தோ வந்து சேர்ந்தார் மகாவிஷ்ணு இந்தச் சோதிப்பிழம்பின் பேரொளி அவரையும் வசீகரித்துவிட்டது. அடிமுடியற்ற இந்த சோதியின் அடி எங்குதானிருக்கும்? நான் போய்ப் பார்த்துவருகிறேன், என்று வராக உருவெடுத்து பூமியின் கீழே சென்றார் மகாவிஷ்ணு. நான் முடியைக் கண்டுபிடிக்கிறேன் என்று ஹம்ஸ உருவெடுத்துப் பறந்தார் பிரம்மதேவர். நாட்கள் மாதங்களாயின. மாதங்கள் வருஷங்களாயின. பூமியைத் தொளைத்துச் சென்ற நாராயணனும் சலித்துப் போனார். சரி போதும் என்றே திரும்பிவிட்டார் மண்ணுலகத்திற்கு.

பிரம்மா மிகுந்த பிடிவாதத்தோடு முடியைக் காணமல் திரும்புவதில்லை என்ற சபதத்தோடு போனவர், பறந்து பறந்து களைத்துச் சிறகுகள் உதிரும் நிலை அடைந்தன. பார்க்கமுடியவில்லை என்றால் தோல்விதானே. நாம் பிரம்மதேவன் தோல்வி அடைவதா? என்ற கேள்வி. தற்செயலாக ஒரு தாழம்பூ எதிரே வந்துகொண்டிருந்தது சிவபெருமானது முடியிலிருந்து. பிரம்மதேவன் பார்த்தார். 'ஏ பூவே! நீயோ நெடுங்காலமாக முடியிலிருந்து பூமியை நோக்கி வந்துகொண்டிருப்பதாகச் சொல்லுகிறாய் ஆகவே முடி இருக்கிறதென்பது நிச்சயம். எனக்கோ இனி பறக்கச் சிவனில்லை. நான் முடியைக்கண்டதாக மகாவிஷ்ணுவின் முன்னிலையில் சாட்சி சொல்லவேண்டும் என்றதாம். தாழம்பூ பாவம்! கருணை மிகுதியினால் ஒப்புக்கொண்டது.

பிரம்மதேவர் வரும்பொழுது வராகமூர்த்தி நின்றிருந்தார் தன் தோல்வியை ஒப்புக்கொண்டார். பிரம்மதேவரோ சாக்ஷியோடு தான் முடியைக் கண்டதாக வர்ணிக்க ஆரம்பித்தார். அண்டம் அதிர்ந்தது. சோதிப்பிழம்பின் நடுவே சிவபெருமான் தோன்றினார். பொய்சொன்ன தன் பயனாக பிரம்ம தேவனுக்கு ஆலயமில்லாமற் போகட்டுமென்றும், சபித்தாராம். இதுதான் அருணாசல புராணத்தின் கதை. இன்னும் அருணாசல தீபத்தன்று சோதிப்பிழம்பை மலையின்மேல் தரிசிக்கலாம். தென்னாட்டுத் திருக்கோயில்களுள் பஞ்சலிங்க க்ஷேத்திரங்கள் என்று சொல்லப்படும் தலங்களும் அருணாசலத்தை அக்னிலிங்கம் என்று துதிக்கும் பக்தர்கள் நெஞ்சம்.

கமலையிற் பிறக்கமுத்தி, காசியில் இறக்கமுத்தி
அருணையை நினைக்கமுத்தி

என்று புராணம் சொல்லும்

திருவண்ணாமலை தீபதரிசனம் மிகவும் விசேஷமாகக் கருதப்படுகிறது. மிகவும் உயர்ந்த மலைச்சிகரத்திலே, மிகப்பெரிய ஆலைக்கொப்பரை வைக்கப் பெற்றிருக்கும். குடம் குடமாய் நெய் ஊற்றி 40 கஜ நீளமுள்ள இரண்டு பெரிய "மல் பீஸ்களை" திரிபோல் மடித்துப் போட்டு தீபம் ஏற்றுவது வழக்கம். காணிக்கை செலுத்த விரும்பும் அடியார்கள் மண்குடங்களிலே நெய்யைக் கொணர்ந்து அப்படியே குடத்தோடு போட்டுவிடுவார்கள் அந்த ஆலைக் கொப்பரையிலே. உயரமோ அதிகம். நெருங்கிச்சென்று ஊற்றவும் முடியாது. ஆகவே மட்குடங்கள் நெய்யோடு தள்ளப்பெறும். கார்த்திகையன்று ஈசுவர சந்நிதியில் கோபுரத்திற்கு எதிரில் சொக்கப்பானை கொளுத்துவார்கள்; உடனே மலைமேல் இந்த தீபம் ஒளிவிட்டு எரிவதைக் காணலாம்.

திருவண்ணமலையைச் சுற்றிலும் பல காதங்கள்வரை இந்த ஒளி தெரியும். சிற்சில சமயங்களில் ஒருவாரம் வரையிலும் எரிந்து கொண்டேயிருக்கும் இந்த அகண்ட தீபம், 'அண்ணமலைக்கு அரோகரா!' என்ற பேரொலி அந்த வானையளாவி நிற்கும் அருணகிரியிலே எதிரொலிக்கும். "அண்ணுமலை யானைப் பாடுதுங்காண் அம்மானய்" என்று பாடிப் பரவசமடைவார்கள் பக்தர்கள்.

வீடுகள் முழுவதும் தீபாலங்காரம், இளம் பெண்களும் குழந்தைகளும் புதிய ஆடை ஆபரணங்களணிந்து அகத்திலே மகிழ்ச்சியும் முகத்திலே முறுவலுமாய் நிற்கிறார்கள். புதிய மணமகள் கார்த்திகைத்திருநாளில் தன் புக்ககம் வந்து தீபமங்கள சோதியைத் தொழுது தன் காதலன் வரவை எதிர்பார்த்து நிற்கிறாள். வீதிகளில் உலர்ந்த பனைமரத்தை நடுவே நிறுத்தி வைத்து சுற்றிலும் மூங்கில்கள் ஓலைகள் இவற்றைக்கட்டி கோபுரங் கள்போல் நிறுத்திவைத்திருக்கிறார்கள். எப்பெருமான் பவனிவந்து எதிர் நின்ற உடனே கற்பூர ஆரத்தியோடு "சுட்கப்பனை" எரியத்தொடங்கும். இதைச் சொக்கப்பானை என்று சொல்வதுமுண்டு. இதன் கருத்து சோதி யைத் தொழுதல்தான், தீ ஆயிரம் நாவுகளோடு ஜ்வலிக்கும். கங்குகள் காற்றிலே பறக்கும். இந்த அற்புதக்காட்சியைக் குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை குதூகலத்துடன் கண்டு கைகொட்டி மகிழ்கிறார்கள். இதை இன்றும் நாம் ஒவ்வொரு வீதிமுனையிலும், கோயில்கள்தோறும்காண்கிறோம்.

"கார்த்திகைத் திருநாள் சிவனடியார்களுக்கு மட்டும்தானு? விஷ்ணு ஆலய தீபாலங்காரம் எதன்பொருட்டு?" என்கிறாள் குழந்தை. கார்த்திகை எல்லோருக்கும் பொது. ஆனல் ஐதீகம்மட்டும் வேறு. மகாபலி சக்ரவர்த்தி யின் இராஜ்யத்தில் இருளே கிடையாதாம். எங்கும் ஒரே ஒளிமயம். என் அரசாட்சியில் இருந்ததுபோல உலகத்தார் இருளின்றி வாழவேண்டும். அதை நான் வருடம் ஒருமுறை வந்து பார்க்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டான் எம்பெருமான் உலகளந்தபொழுது. அதன் பொருட்டே மூன் றுநாட்கள் தீபாலங்காரம் செய்கிறோம் என்பார்கள் விஷ்ணுபக்தர்கள்.

கதை எதுவாயிருந்தாலென்ன? எங்களுக்கு விழா. "கைத்தலம் நிறைகனி; அப்பமொடு அவல்பொரி" எங்களுக்குக் கிடைக்கும். மாவலி சுற்றுவதும் சீனிவெடி மத்தாப்பு, புதிய உடைகள் இவைகள்தான் எங்களுக்கு முக்கியம், என்று ஆனந்தப்படுகிறார்கள் குழந்தைகள்.

கோயில் கட்டி முடிந்துவிட்டது. நாட்டிலுள்ள சிற்பிகளெல்லாம் அறிவுத்திறம் கைத்திறம் எல்லாவற்றையும் அதற்கே அர்ப்பணம் செய்து விட்டார்கள். மகேந்திர பல்லவன் கட்டிய அந்த அற்புதமான கோயிலுக்கு நாளும் குறித்தாகிவிட்டது. ஊர்முழுவதும் ஒரே கோலாகலம். காஞ்சி புரத்தை நோக்கி ஒரே ஜனசமுத்திரமே வருவதுபோலிருந்தது.

விடிந்தால் கும்பாபிஷேகம் நடுநிசி, ஆனந்த மிகுதியினல் தூக்கம் வராமற்புரண்ட அரசன் முன் கைலாசநாதரேதோன்றினர் "உன் கும்பாபி ஷேகத்தை இன்னொருநாள் வைத்துக்கொள். நின்ற ஊரில் என் மெய் யடியானுகிய பூசலார் என்பவர் நெடுநாளாக யோசித்து மிகவும் அற்புத மான ஒரு கோயில் கட்டியிருக்கிறார். அங்கே போகவேணும்' என்றார்.

அரசன் திகைத்துப்போனன். நமக்குச் சமீபத்தில், அற்புதமான கோயில் யார் கட்டியிருப்பார்கள் என்று யோசித்தான். எம்பெருமானே வந்து சொல்லி யிருக்கிறாரே, அந்தத்திருப்பணியையும் அப்படிப்பட்ட மெய்யடியாரையும் பார்க்கவேணுமென்று எழுந்தான்; ஊரை அடைந்து

விசாரித்தான். 'கோயிலே கிடையாது' என்றார்கள் ஊரார். அரசனும் ஆச்சர்யம் அதிகரித்து, "பூசலார் என்றாவது ஒருவருண்டா?" என்றான். 'இந்த ஊர்க்காரர்தான், ஐயோ! பாவம்! இதோ அழைத்து வருகிறோம்' என்று சிலர் கிளம்பினார்கள். அரசன் தானே சென்றான். பூசலாரிடம் வணங்கி "தாங்கள் கட்டிய கோயில் எங்கே நான் பார்க்கலாமா? இன்று கும்பாபிஷேகமென்று எம்பெருமானே தெரிவித்தார்" என்றவுடனே, பூசலார் திகைத்துப்போனார். பின் கண்கள் பனிசோர, நாக்குழற 'எளியேனை ஒருபொருளாய் எண்ணியா எம்பெருமான் இப்படி அருள் செய்தார்!" என்று திருவருளை வியந்து, "அரசே! என்னிடம் பொன் ஏது? நினைவினால் எம்பெருமானுக்குக் கோயில் கட்டினேன்; கட்டடம் முடிந்தது. இன்று நாளையும் குறித்தேன்." என்றார்.

அரசனது கண்கள் நீர் மல்கின. அன்பினால் இழைத்த கோயில்தான் அழகானது. எவ்வளவு அழகாயிருந்தபோதிலும் உங்களது மனக்கோயிலுக்கு அடுத்தபடியாகவேதான் மதித்தார் எம்பெருமான். கைலாசநாதருடைய பரிபூர்ண கிருபை இந்த ஏழைகட்டிய கோயிலுக்குத்தான் உரியது" என்று நினைத்தான் பல்லவன்.

இத்தகைய பெருமைவாய்ந்த பூசலாரை நமக்கு அளித்தது இந்தக் கார்த்திகை மாதம்தான். இது மட்டுமல்ல. சைவமத சித்தாந்தங்களையே வகுத்த மெய்கண்ட தேவர் என்னும் பெரியார். பூதஉடல் நீத்துப் புகழ் உடல் பெற்றதும் இந்த மாதத்திலேதான். இதைக்காட்டிலும் பெருமை வேறென்ன இருக்கிறது?

கார்த்திகை மாதத்திற்குமட்டுமல்ல. மனித சமூகத்திற்கே அழியாத பெருமையைக் கொடுத்து பவக்கடலைத்தாண்டி மோக்ஷத்துறைக்கு அழைத்துச் செல்லும் அரிய தோணிபோன்ற அனேக பாடல்களை பொக்கிஷம் போல் நமக்கு உதவியுள்ள ஆழ்வார்களில் திருமங்கை மன்னன் கார்த்திகை மாதம் கிருத்திகையன்றும், மறுநாள் ரோகிணியில் திருப்பாணாழ்வாரும் அவதரித்த பெருமையைப் படைத்தது இம்மாதத்திற்குரிய தல்லவா?

---

## நினைவிருக்கட்டும்

1. அடுத்த இதழ் சந்தா செலுத்தியவர்கட்கே அனுப்பப் படும். ஆகையால் 31-12-42க்குள் பணம் அனுப்பி வழக்கம்போல் ஆதரிப்பீர்களென்று நம்புகிறோம்.
2. ஆண்டு மலருக்கும், புதுவருஷ சந்தாவுக்கும் சேர்த்து அனுப்புவோர் ரூ. 2/12/0 அனுப்பவேண்டும்.
3. ஆண்டுமலருக்குமாத்திரம் பணம் அனுப்புவோர் ரூ. 1/6/0 அனுப்பவேண்டும்.
4. "வாத்ஸல்யம்" ஆரம்பம் முதலோ, அல்லது அதன் பிறகோ ஆரம்பித்து ஒரு வருஷத்திற்காக ஏற்கெனவே சந்தா செலுத்தியுள்ளவர்கள் நமது ஆண்டு மலருக்காக ரூ. 1-4-0 அனுப்பினால் போதும்.
5. சென்ற இதழில் வெளியிட்டுள்ள "ரிஸர்வேஷன்" கூபனை உபயோகிக்கவும்.

மானேஜர்.




## 12

# ஸ்ரீமதி கல்யாணி சாஸ்திரி

1932-ம் வருடம் தைமாதம் ஒருநாள் பகல் சுமார் மூன்று மணி இருக்கும். ஒரு சார்ஜண்டு இரு கான்ஸ்டேபில்கள் ஒரு சட்டைக்காரி ஆக நான்கு பாடிகார்டுகள் புடைசூழ நான் ஏறிவந்த பஸ் வேலூர் சிறைச்சாலையின் வாசலில்வந்து நின்றது. அந்த ப்ரம்மாண்டமான மதில் சுவருடன் கூடிய சிறைச்சாலையின் தோற்றத்தைக் கண்டவுடனே என்னிதயத்திலிருந்து பொங்கி எழுந்த ஆனந்த உணர்ச்சியின் அற்புதத்தை அளவிட்டுக் கூற முடியாது. வெகுநாள் தபம்செய்த பக்தனுக்குப் பரமபதத்தைக் கண்டால் உண்டாகும் ஆனந்தமோ? என்றும் எண்ணினேன். ஆம்...அதற்கும் ஒரு வகையில் பொருந்தும். எப்படி என்பீர்களோ...சாக்ஷாத் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா அவதரித்த சிறந்த ஜன்மபூமி சிறைச்சாலையல்லவா ?

முதல் கதவைத்திறந்து வெகு அன்புடன் இருவார்டர்கள் என்னை உள்ளே அழைத்துச் சென்றார்கள். எனது சந்தோஷம் பின்னும் பஞ்சம ச்ருதியை எட்டியது. இரண்டாங் கதவருகில் போகும்போதே வானத்தை யளாவும்படியான ஒரு பெருத்த ஆரவாரமும் என் ஆப்தசினேகிதைகளின் குரலுடன் கலந்து கொக்கரிக்கும் கூச்சலும் அம்ருததாரையைப் போல் என் செவியில் விழுந்தது. "இந்தநேரம் மதராஸ் வண்டிதான்வரும். எங்க ஊர்க்காரர்கள்தான் வந்திருக்கிறார்கள். என்று மதராஸ்காரர்கள் கூவும் குரலும் கேட்டது. நான்தான்...என்று கூச்சலிடவும் என்னுள்ளம் முன் வந்தது. ஆனால் பலர் பக்கத்தில் நின்று, சிறைச்சாலையின் ரூல்ப்ரகாரம் மச்சக்குறிப்பு, ஊர், பேர் முதலியன குறித்துக்கொண்டு சாமான்களை சோதனையிட்டுக் கொண்டிருந்திருந்ததால் கூச்சலிட முடியாதுபோயிற்று. அந்த சொல்பநேரமும் எனக்கோர் யுகம்போல் தோன்றியது. "அடேயப்பா! என்ன ஆரவாரம்." என்று வெள்ளைக்கார மாதுமேட்ரன் ஆங்கிலத்தில் சொல்லியது இப்போதும் காதில் ஒலிக்கிறது.

இந்த திட்டங்கள் முடிந்ததும் சிறைச்சாலையின் உள்புறம் கதவைத் திறந்துவிட்டதுதான் தாமதம். என்னை மூச்சுத் திணறும்படியாக என்னாருயிர் சினேகிதைகள் கட்டியணைத்துக்கொண்டு, 'கோதை!...கோதை!... என்கிறார்களேயன்றி வேறு பேச்சு வாயில் வரவில்லை.

சுமார் 5 நிமிஷநேரம் எல்லோருடைய உள்ளத்திலும் ஆனந்தப்புசல் காற்று அடித்துபிறகு சற்று ஓய்ந்தது. ஏராளமான சகோதரிகளைக் கண்ட உத்ஸாகத்தின் உணர்ச்சி இன்னமும் என் இதயத்தில் தாண்டவமாடுகிறது.

அச்சமயம் ஒரு பெரியம்மாள், புன்சிரிப்பும் வினயமும் கூடிய முகத்துடன், 'கோதையை நீங்களே கடித்துத் தின்றுவிடப்போகிறீர்களா! எனக்குக் கொஞ்சம் கிடையாதா !' என்று அன்பொழுகக் கேட்டுக்கொண்டு வந்து என் கைகளை பிடித்துக்கொண்டார்.

இந்தம்மாளை இதற்கு முன்பு நான் சில தடவைகள் பார்த்திருக்கிறேனேயன்றி பேசிப்பழக்கமில்லை. பார்த்த ஜாடையை அறிந்தேன். அதற்குள் ஒரு சிநேகிதை, "என்னடி விழிக்கிறாய்? நம்ப கல்யாணியம்மாளைத் தெரியவில்லையா?...திருச்சி டாக்டர் சாமிநாத சாஸ்திரியாரின் தர்ம பத்தினி. இவர் இங்கு எங்களுக்குமுன் வந்துவிட்டார். தேசசேவையின்பால் உள்ள ஆர்வத்தில் தமிழ்நாட்டிலேயே மிகச் சிறந்ததான பண்டிகை போகி, சங்கராந்தி என்பார்களே, அதைக்கூட விட்டு அன்றே அவர் சிறைச்சாலையிலேயே ஸ்ரீ கிருஷ்ணனைத் தொழுது சக்கரைப்பொங்கல் செய்யலாம் என்று வந்துவிட்டாராம். பெரியவர்களாகிய கல்யாணியம்மாளும், சேலம் ஸ்ரீமதி காமாக்ஷியம்மாளும் எங்களுக்கெல்லாம் தாய்போலிருந்து கவனிக்கிறார்கள். வெகு நல்லமாதிரி. பெருந்தன்மை, பரோபகார சிந்தையுடையவர். பெரிய குடும்பத்தில் பிறந்து, பெரிய குடும்பத்தில் புகுந்து, அதிலும் சிறந்த தேசபக்தர், பலதரம் சிறைக்குச்சென்ற வீரருக்கு மாலையிட்டதன் பயன் எல்லாத் துறைகளிலும் வெகு மேன்மையாக இருக்கிறார். சமையல்செய்வதில் எப்பேர்பட்ட கைதேர்ந்தவர் தெரியுமா..அதிலும் மிளகு குழம்பு செய்வதில் தங்கமெடல் பரிசு கொடுக்கலாம்" என்று முற்றுப்புள்ளி வைக்காது சொன்னாள்.

இதைக்கேட்ட கல்யாணியம்மாள் அவருடைய இயற்கையான புன்னகை தவழும் வதனத்துடன், "சரி...சரி...வந்த மனுஷியை ஒருவாய் காப்பி சாப்பிடுகிறாயா என்றுகூடக் கேட்காமல் அத்தைப் பாட்டிக்கதை அளக்கிறீர்களே. மிளகு குழம்பின் காரம் நெஞ்சில் உரைத்து நானும் காரமாகிவிடப்போகிறேன். தயவு செய்து முதலில் தித்திக்கும் காப்பியைச் சாப்பிடட்டும். அப்புறம் காரம் ஊட்டலாம்" என்றார்.

இந்த வார்த்தையின் கம்பீரம் எப்படியிருக்கிறது பாருங்கள். இந்த ஒரே வார்த்தையிலிருந்து இந்தம்மாளின் உத்தமலக்ஷணமும் தாய்போன்ற ஸ்தானத்திற்குத் தகுதியுடையவர்கள் என்பதும் விளங்கவில்லையா ! பெருந்தன்மையான குணமும் விருந்தினரை உபசரிக்கும் விதமும் சாதாரணமாக எல்லோருக்குமே வந்துவிடாது. பெரிய குடும்பத்தில் பிறந்து பெரியவர்களின் பழக்கத்தில் உண்டாகவேண்டும். சிலருக்கு உயர்ந்தபடிப்பின் பலனால் உண்டாகலாம். சிலருக்குப் பிறவிக் குணமாகவும் அமையலாம். கடைசியில் கூறியது வெகு சொல்பமேயாகும்.

பதினொரு குழந்தைகளைப் பெற்ற தாயார் வயிற்றில் அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் அகப்படாது என்கிற பழமொழிப்படி அவர் பிறந்தார். நல்ல பழக்கத்தின் விளைவால் குடும்ப நிர்வாகம், பெரியாரைப் பேணுதல், விருந்தாளிகளை உபசரித்தல் முதலிய நல்ல குணங்கள் அமைந்து தேசபக்தி நிறைந்த 'சிறைக்குச் செல்வதே எங்கள் குலப்பெருமை' எனும் பார்த்தாவுக்கு வாழ்க்கைப்பட்டதால் தேசபக்தியும் சமத்ருஷ்டியும், கதரின் அபிமானமும் உண்டாயின.

மிளகு குழப்பு செய்வதற்குமேடல் கொடுக்கலாம் என்று முதலில் என் சிநேகிதை சொல்லியதோடு நின்றது. ஆனால் தன் கையால் நூல் நூற்றுக் கதர் கட்டுவதில் மிக்க தேர்ச்சிபெற்ற அந்தம்மாள் வெகு அழகாக நூல் நூற்றதற்கு அகில இந்திய பொருள்காக்ஷியில் இவருடைய நூலையும் கண் காட்சியில் வைத்து எல்லோராலும் கொண்டாடப்பட்டு தங்கபதக்கத்தைப் பரிசாகக் கொடுத்தார்கள்.

இந்த பெருமையை கல்யாணியம்மாள் மட்டும் அடையவில்லை. பெண் குலமே அடைந்ததாகவே நான் எண்ணினேன். கதர்ப்புடவை உடுப்பதில் தாமே நூற்றநூலை நெய்து உடுப்பதென்பது பெருமையிலும் பெருமை யல்லவா?...

அவர் அதிகம் படித்தவரில்லை. தேவைக்குப் போதுமான அளவுபடித் தவர். சதா கலகலப்பாக இருப்பவர்; எனினும் அவர் முகத்தில் ஒரு சிறிது விசனம் குடிகொண்டிருந்ததை காரணமறியாததால் ஏதாயிருக்கும் என்று எண்ணினேன்.

அவருக்கு அருமையான ஒரே ஒரு பெண்தான். "அந்த பெண்ணும் வெகு சிறிய பிராயத்தில் குறைப்பட்டுவிட்டது. அந்த துக்கத்தைவிட வேறு என்னவேண்டும்" என்றார். அதைக் கேட்டதும் அந்தம்மாளின் மனோவலி மையையும் துக்கத்தை அடக்கி அவர் சகாக்களுடன் கலந்து பரிமாறும் அதிசயமும் எனக்கு வியப்பாக இருந்தது.

நான் அந்தம்மாளிடம் விதவாவிவாகத்தைப்பற்றி ப்ரஸ்தாபிக்க பலதரம் முயன்றேன். ஆனால் என்ன சொல்வார்களோ என்று அஞ்சினேன். சிறைச்சாலை அதிகாரிகள் சில பத்திரிகைகள்; புத்தகங்கள்தான் சிறைக்குள் அனுமதிக்கிறார்கள். அதில் நமது ஜகன்மோகினியை அனுமதித்து நான் போவதற்கும் முன்பு முதலே வெகுநாளாக ஜெயிலுக்கு பத்திரிகை போய்க்கொண்டிருந்தது.

அப்போது சமீபத்தில்தான் வெளியான நமது புத்தகம் சாமளநாதனை அந்தம்மாளிடம் நான் படிக்கக் கொடுத்தேன். சிறையில் அவர் அதைப் படித்ததும் விதவாவிவாகத்தைப்பற்றி அடிக்கடி அந்தம்மாளும் நானும் பேசுவதுண்டு. வாயளவில் சிலர் சிலருக்குச் சொல்லிவிடலாம். அந்தம்மாள் "கோதையம்மாள்! நாங்கள் பரிபூர்ண சம்மதத்துடன்தான் இருக்கிறோம். பாலிய விதவாவிவாகத்தில் எனக்கு ஆக்ஷேபனையே இல்லை. எங்கள் பேபி என்று இஷ்டப்படுகிறாளோ அன்று நாங்கள் விவாகத்தைச் செய்ய சித்த மாயிருக்கிறோம்" என்றார்.

அதேபோல் பின்னர் சிலவருஷங்களுக்குள் தமது அருமைப் புதல் விக்குக் கல்யாணத்தைச் செய்து இப்போது பேரன் பேத்திகளுடன் வெகு இன்பமாக இருக்கிறார்கள். சீர்திருத்த ப்ரஸங்கங்கள் செய்வதும் பத்திரிகை யில் எழுதுவதும் தாம் செய்து காட்டாதிருப்பதும் போலில்லாமல் சொல்வதைச் செய்துகாட்டுவது பெரிதல்லவா?...சிறைச்சாலையில் சொல் லியபடி செய்ததைப் பாராட்டாதிருக்கமுடியுமா!

அந்தம்மாளும் நாங்களும் பல ஊர்களுக்குச் சென்று ப்ரசாரம் செய்திருக்கிறோம். வெகு தெளிவாயும் உபமான உபமேயங்களுடன் ஹாஸ்யமாயும் அழகாயும் பேசுவார். காங்கிரஸ் மகாசபைக்கு தம்பதிகள் டெலிகேட்டுகளாகச் சென்றிருக்கிறார்கள். திருச்சி நகரசபை ஜில்லா போர்டுகளிலும் தம்பதிகள் அங்கத்தினராக இருந்து உழைத்திருக்கிறார்கள். சலிக்காத உழைப்பாளி. சிநேகத்திற்கு மிகவும் பாத்திரமானவர்.

18307

ஸ்ரீதான் வீட்டிலிருந்து சந்திரா எப்படித்தான் வந்தாளோ, அவளுக்கே தெரியவில்லை. எந்திரம்போல் வந்து தடா ரென்று சோபாவில் சாய்ந்தவள் கண் திறக்கவேயில்லை. தன்னுருயிர் ஸ்ரீதரன் தன்னை ஏமாற்றியதற்குக்கூட அவள் மனது சகித்தது. அவனுக்கோர் ஊமை மனைவியும் நொண்டி மாமியாரும் வாய்த்துள்ள வயிற்றெரிச்சலை அவளால் சகிக்கவே முடியவில்லை. கதறிக் கதறிக் களைப்பே உண்டாகியது.

"அவருடைய வாழ்க்கையின் ஆனந்த பாலத்தை உடைத்தெறிந்து முள் வேலியில் அவர் வாழ்க்கைச் சக்கரத்தைப் புரட்டிய மகா பாவி நானல்லவா! சனியன்போல் அவரை பலவிஷயங்களிலும் அமைந்து கெடுத்துவிட்டேன். இந்த பாதகத்தை நான் எப்படித் தீர்த்தால்தான் தீரும்? என்னை இப்படியே உயிருடன் நெருப்பிலிட்டுப் பொசுக்கினுலும் தீராதே. என்ன செய்வேன்? அவர் சொத்தை அவரிடம் சேர்ப்பித்ததற்குக்கூட கோபித்துக்கொண்டு அவைகளை என் முகத்திலேயே வீசி எறிந்துவிடுகிருரோ என்றும் பயமாயிருக்கிறதே!" என்று பலவிதமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் நரஸிம்மன் வந்தார்.

தனது நிலைமையை எங்கே தெரிந்துகொண்டுவிடுவாரோ என்கிற பயத்தினுல் சடக்கென்று எழுந்து, தலைவலி தைலத்தைத் தடவிக்கொண்டு படுத்தாள். நரஸிம்மன் "கண்ணு! உடம்பு எப்படி இருக்கிறது? இன்னும் தலைவலி விடவில்லையா!" என்ருர்.

சந்.—தலைவலி தேவலையப்பா! நாடகம் நன்ருயிருந்ததா!

நரஸி:—நாடகம் பார்க்கும்போதெல்லாம் உன்னையே நினைத்துக்கொண்டிருந்தேன். கதை மிகவும் ஸ்வாரஸ்யமாயும், அழகாயுந்தான் இருந்தது. நடிப்பும் நன்ருக இருந்தது. ஆனுல்...

சந்:—என்னுப்பா! ஆனுல்... உங்களுக்கு உட்கார்ந்திருக்க சிரமமாயிருந்ததா!

நரஸி:—இல்லையம்மா! அந்த துரோகி... அவன்தான்—இந்த பூதமும் பிசாசும் நிறைந்த வீட்டை நம் தலையில் கட்டி ஏமாற்றி நமது குடும்பத்தின் இன்பத்தையே சிதறவடித்த பாதகன்-அவனுடைய பிள்ளைதான் இந்த கதையை எழுதி, நடித்தான். அவனைப் பார்த்த போதே எனக்குப் பிடிக்காது எரிந்தது. நீ வீட்டுக்குப்போவதும் நல்லதென்றுதான் அனுப்பினேன். அவன்மீதிருந்த ஆத்திரத்தில் எனது முகவுரையில் நாடகத்தையும் அவன் நடிப்பையும் தாக்கியே பேசிவிட்டேன்...

என்றதைக் கேட்டதும் ஏற்கெனவே தான் எண்ணியிருந்த சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டதால் மனது துடித்தது. "பெரிய சபையில் என்னுல் திட்டும் வாங்கியாயிற்று!" என்று உள்ளம் புழுங்கினுள். "நான் நினைத்தபடியே ஆகிவிட்டதே! அவர் மனது இந்த

கோப உரையினல் என்ன தத்தளித்ததோ, தவித்ததோ! என்னை என்ன நொந்துகொண்டாரோ! அடாடா! என்ன பாவிப்பிறப்பு பிறந்தேன். என்னை அவர் மனப்பூர்வமாக நேசித்ததற்கு இத்த கைய சித்திரவதைகளா ப்ரதிபலனுகக் கிடைத்தன!" என்று விசனக்கடலாடினுள். தகப்பனுர் சாப்பிடக் கூப்பிட்டதற்குத் தனக்குப் பசியில்லையென்று சாப்பாட்டை வெறுத்தாள். நரஸிம்மன் தமது போஜனத்தை முடித்துக்கொண்டு படுக்கச்சென்ருர்.

சந்திராவுக்குள்ள விசனத்தில் நித்திரா தேவியும் அவளை வெறுத்தாள். வெகு நேரம்வரையில் படுக்கையில் புரண்டு புரண்டு பாழும் இரவைப் பிடித்துத் தள்ளினுலும் அசையாது யுகம்போல் வளர்ந்து போவதைக் கண்டு வெறுத்தாள். மணி, தன் கடமையைச் செய்து 12...1....2...என்று அளக்கின்றதேயன்றி சூரியனைச் சீக்கிரம் வர வழைக்கும் சக்தி அதற்கு உண்டா!

ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களை எண்ணினுலும் எண்ணலாம். அவள் மனத்தில் உதித்து உலுப்பி வாட்டும் எண்ணங்களுக்கு முடிவுமில்லை, எண்ணிக்கையுமில்லை. படுத்துப் புரள்வதில் உடம்பும் வலி எடுத்துவிட்டது. மெல்ல எழுந்துவந்து வராண்டாவில் நின்ருள்.

வெகு துல்லியமான சந்திரன் வானத்தில் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்தும் உலகமே வெறும் சூன்யமாயும், சோபையை இழந்த மூதேவித் தோற்றமாயும் காணப்பட்டது. அசையா பிம்பம்போல் சற்று நின்ருள். அதுவும், மனத்திற்குச் சாந்தியைத் தரவில்லை. ஆகாயத்தையும், பூமியையும் எத்தனை நேரந்தான் பார்க்கமுடியும்? அவைகளோடு பேசி இன்புறும் வழியாவது தெரியுமா!

அதிலும் மனது சலித்தது. சோர்வுற்ற வதனத்தோடு அந்த வராண்டாவிலேயே உலாவினுள். "இந்த சந்திரனின் ஒளியில் என் அன்பரின் முகம் தெரியக்கூடாதா! எத்தனை நேரம் நீயே உன்னுரு வைக் காட்டி வதைக்கலாம்" என்று சந்திரனையும் வெறுத்தாள்... மீண்டும் பித்துபிடித்தவள்போல் உள்ளேபோனுள். மணி அப்போது நாலடித்தது. பொழுதுவிடியும் சமயத்தை எடுத்துக் காட்டும் பக்ஷியினங்கள் ஆனந்தமாகக் கூவி உலாவத் தொடங்கின. மாஸங்களில் நான் மார்கழி என்கிற கீதா வாக்குப்படி தனுர்மாதமாகையால் அந்த நேரத்தில் பக்தகோடிகள் சிலர் மனமுருகி பக்திப்பெருக்குடன்,

மாரி மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்குஞ்
சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணுவுன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

-திருப்பாவை

என்கிற பாசுரத்தை பூபால ராகத்தில் பாடி பஜனை செய்துகொண்டு போவதை மாடியிலிருந்து பார்த்த சந்திராவின் மனத்தில் ஆனந்த அலைமோதியது. "சீரிய சிங்காசனத்திருந்து யாம்வந்த காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்' என்கிற கடைசீ இரண்டடிகள் அவள் இதயத்தில் வெகு தெளிவாகப் பட்டுப் புதிய புதிய எண் ணங்களையும் யோசனைகளையும் கொடுத்தன.

"அந்த சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான பூங்கோதையும் அக் காலத்தில் என் போன்ற ஒரு மானிட ஜென்மாவில்தானே தோன்றி உன்னை அனன்யபாவமாகச் சிந்தித்துப் பூமாலையினாலும் பாமாலையினாலும் அர்ச்சித்து வழிபட்டாள். அந்த கோதை நாச்சி யாரின் குறையை நீ சீரிய சிங்காதனத்திருந்து தீர்த்து ரக்ஷிக்க வில்லையா! அத்தகைய பரமகிருபாநிதியாகிய நீ—வாத்ஸல்யக் குன்றாகிய நீ—என்மீது மட்டுமா இரக்கங்காட்டாது கல்நெஞ்சனாக இருக்கிறாய்?...என்னை விட்டாலும் விட்டுவிடு. என் அன்பரைக் கைவிடாதே...காப்பாற்று. அவரை இதுபரியந்தம் சோதித்தது போதும். இனியும் சோதிக்காதே. அவருடைய ஊமை மனைவிக்கு உன் திருநோக்கின் கடாக்ஷத்தினால் பேசும் சக்தியைக்கொடுத்து, அவருடைய குறையைத் தீர்த்துவிடு...கண்ணா!...மணிவண்ணா!"... என்று தன்போக்காக ப்ரார்த்தனை செய்தாள். பித்துபிடித்தவள் போல் உலாவினாள். மறுபடியும் படுக்கையில் சாய்ந்தாள். வெகு நேரம் சென்று கண்ணயர்ந்தாள்.

நரஸிம்மன் அவசரமாக பத்து மைல் தூரத்திலுள்ள ஒரு ஊருக் குப்போய் வரவேண்டியிருந்ததால் அதிகாலையிலேயே எழுந்து தனது காரியங்களை முடித்துக்கொண்டு பிரயாணச்சித்தமாக சந்திராவின் அறையில் வந்து பார்த்தார். அவள் அப்போதுதான் அயர்ந்து தூங்குவதால், நாகம்மாளிடம் "நான் இப்போதே வெளியில்சென்று இரவுதான் திரும்பிவருவேன். குழந்தையை ஜாக்ரதையாகப் பார்த் துக்கொள்ளு" என்று கூறிச் சென்றார்.

இரவு பூராவும் தூங்காததால் சந்திரா கண் திறந்து பார்க்கும் போது மணி 8 அடித்துவிட்டதுகண்டு அலறியவாறு எழுந்தாள். நாகம்மாவால் தகப்பனார் வெளியே போன விஷயமறிந்தாள். தனது காலை பூஜைகளை முடித்துக்கொண்டு சோபாவில் வந்து படுத்தாள்.

நாகு:—குழந்தாய்! இந்த ஊரிலுள்ள விஜயாம்பிகைகோயில் மிகவும் பிரஸித்தமானது. வருகிறாயா போய் தரிசனம் செய்து விட்டு வரலாம்.

சந்:—நான் எங்கும் வரவில்லை. என்னிடம் கிருபையுள்ள அம் பாள் எனக்கு இப்படியே அனுக்ரகம் பண்ணால்போதும், நீ வேண்டு மானால் போய் தரிசனம் செய்துவிட்டு மஞ்சள், பிரஸாதம் வாங்கிக் கொண்டு வா. இரவு பூராவும் தலைவலியால் தூக்கமில்லை; இன்னும் எனக்கு உடம்பு சரியாக இல்லை—என்றாள்.




நாகம்மாள் மரியாதைக்குறைவாய் கேட்கக்கூடாதென்பதால் சந்திராவை ஒன்றும் கேட்கவில்லையேயன்றி ஏதோ ரகஸியமான விஷயம் இருக்கிறதென்று மட்டும் அவள் மனத்தில் தோன்றியது. அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாது கோயிலுக்குச் சென்றாள்.

சந்திராவுக்கு மனது தாமரையிலைத் தண்ணீர்போல் தத்தளிக்கின்றது. நிலைகொள்ளாது அலையும் நெஞ்சுடன் போராடியவாறு அவ்வறைக்குள் அங்குமிங்கும் உலாவினாள். சாந்தியடையக் கடவுளிடம் மனதாற முறையிட்டாள். ஒன்றிலும் பலிதமடையாது சோபாவில் படுத்தாள். புலம்பிப்புலம்பி கண்கள் தடித்து சிவந்து எரிச்சலுண்டாகியது. மறுபடியும் எழுந்து தன் கைப் பெட்டியைத் திறந்து அதிலுள்ள ஸ்ரீதரனின் புகைப்படத்தை எடுத்தாள். அதைப் பார்க்கப்பார்க்க மனது கட்டுக்கடங்காது துள்ளிப் பொங்குகிறது...'ஐயோ! ஸ்ரீதர்! என்னை ஏன் இப்படியெல்லாம் வாட்டி வருத்திக் கொலை செய்ய வேண்டும்? ஸ்ரீதர்...ஸ்ரீதர்...என்னைக் கொன்றுவிடக் கூடாதா! பகவானுக்கு நான் என்ன அத்தனை அபராதம் செய்தேன்' என்று தன்னை மறந்து வாய்விட்டுக் கூறிக் கண்ணீர்விடும் சமயம், "சந்திரா!".... என்ற ஒரு அற்புத குரலின் ஒலி அவள் காதில் அமிருததாரையைப்போல் கேட்டு அலறியவாறு எழுந்து உட்கார்ந்தாள்.

தன்னுடைய மனப் பிராந்தியில் ஒலித்த சப்தமோ என்று அஞ்சினாள். "சீச்சீ!...இதென்ன உருவெளித் தோற்றம்....என்னை சோதிக்க இதுவும் ஒன்றா! என் அன்பராவது, என்னை நினைப்பதாவது? இனி மறு ஜன்மத்தில்தான்" என்று கூறியவாறே சோபாவில் சாய்ந்தாள்.

"உருவெளித் தோற்றமில்லை...வீண் சோதனையுமில்லை. உன்னை நான் எனது ஜென்மாவில் மனத்தில் மறக்கவும் இல்லை. மறக்கவும் மாட்டேன்...நான் உள்ளே வரலாமா? சந்திரா!" என்று மீண்டும் சற்று எடுத்த தொனியில் அன்பு ததும்பக் கேட்டான்.

கண்ணீர் பெருகச் சோர்ந்து கிடக்கும் சந்திரா மீண்டும் அலறியவாறு எழுந்து நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். தன்னிதயக் கோயிலில் எப்போதும் வீற்றிருக்கும் தன் ஆத்ம துரை அங்கு உண்மையிலேயே நிற்பதைக் கண்டு தேகம் மயிர்க்கூச்செறிந்து எதிர்பாராத சந்தோஷத்தின் தாக்குதலால் தேகமே 'கிடுகிடு' என்று ஆடியது. தன் கண்களைத்தான் நம்பாது பிரமித்தாள்; தியங்கினாள். "ஸ்ரீதர்!...ஸ்ரீதார்!"....என்று கூவியவாறு ஓட்டமாக வந்து தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தமுடியாது அவனுடைய இரு பாதங்களையும் கெட்டியாகப்பிடித்துக்கொண்டு அவன் காலடியில் நெடுஞ்சாங்கடையாக விழுந்து, "ஸ்ரீதர்!...என்னை மன்னிப்பீர்களா! மகத்தான துரோகத்தைச் செய்துவிட்ட எனக்கு கருணை நிறைந்த இதயத்திலிருந்து மன்னிப்பு உண்டாகுமா! அந்த தூய இதயத்தில் இந்தப்பாவிக்கு ஒரு அணுப் பிரமாணம் இடம் கிடைக்குமா!...ஸ்ரீதர்! ஸ்ரீதர்!..."என்று தன்னை மறந்துக் கதறினாள். கண்ணீர் பெருக ஸ்ரீதரனின் கால்களில் அவள் முகம் பதிந்தது.





முதல்நாள் இரவு ஸ்ரீதரன் மரத்தடியில் நின்று தன் இன்ப தேவதையை நிலவின் ஒளியில் தரிசித்துப் பூரித்தவன் அவள் உள்ளே சென்றதும் மனமுடைந்தது. ஏக்கம் நிறைந்து உள்ளம் அந்தகாரத்தில் மூழ்கியது. தன் போதாக்காலக்கொடுமையில் தன்னைத் திருடனென்று யாரேனும் சந்தேகித்துப் பிடித்துக்கொள்ளப்போகிறார்களே என்கிற பயத்தால் சற்று நேரம் சென்றுமீண்டும் வீட்டிற்கு வந்தான். இருக்கைகொள்ளாது துடித்தான். தன் தாயாரின் நகைகளைக் கொண்டுபோய் தன் தகப்பனாருக்குக் காட்டினால் அவருக்குத் தெரிகிறதா பார்க்க வேண்டுமென்ற யோசனை தோன்றியதால், அவைகளையும் பெட்டியுடன் பணத்தையும் எடுத்துக்கொண்டுபோய், "அப்பா!...இதோ பார்த்தீர்களா! இதெல்லாம் உங்களுக்கே சொந்தமாகக் கடவுள் கொடுத்தாரப்பா!...இனி கஷ்டப்படவே வேண்டாம்" என்று காட்டினான்.

சித்த ஸ்வாதீனமின்றி தன்போக்காகப் படுத்திருக்கும் கிழவர் எழுந்து உட்கார்ந்து நகைகளைப் பார்த்தவுடனே "இது... இது...என்னுருயிர் சுந்தரியினுடைய நகைகளாச்சே...சுந்தரியே வந்தாளா?...இது என் கண்மணி உனக்குச் செய்தது...திருடன்... கொண்டுபோனானே......பணம்...பணம்!"...என்று பிரமிப்பால் மிரண்டுபோய் நகைகளைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். பணத்தைக் கைநிறைய எடுத்து அளைந்து பார்த்தார். மனதில் சிறுகச் சிறுகத் தெளிவும், ஒருவித மாறுதலும் உண்டாவதைக் கண்ட ஸ்ரீதரன் உள்ளம் பூரித்து "அப்பா!...உங்களுக்கு நன்றாகத் தெரிகிறதா?...அம்மாவினுடைய நகைகள்தானப்பா இவை...இதுவும் எனக்கு நீங்கள் அருமையாகச் செய்து போட்டதுதான்...இதைப் பார்க்க உங்களுக்குச் சந்தோஷமாயில்லையாப்பா?"...என்றான்.

கிழவரின் முகத்தில் தெளிந்த ஒரு புதிய சோபை உண்டாகியது. "தம்பீ!...இதென்ன நகைகள்...உங்கம்மா எங்கே?" என்று தடுமாறியவாறு கேட்டார்.

ஸ்ரீதர:—அப்பா! நேற்றிரவு கடவுள் வந்து அம்மா கொடுக்கச் சொன்னதாக இவைகளைக் கொடுத்துவிட்டு உடனே போய்விட்டார். இது உங்களுக்கு மிகவும் ஆறுதலளிக்குமென்று அம்மாவுக்குத் தெரியுமல்லவா! அதனால்தான் அனுப்பினாள்.

கிழவ:—அம்மா அனுப்பினாளா! கடவுள் வந்தாரா! கடவுளா!... நிஜமாகக் கடவுள் வந்தாரா!...நீ பார்த்தாயா...ஐயோ! எனக்கேன் காட்டவில்லை? எந்த கடவுள்? நமது 'விச்ராந்தி'யில் புதிதாக ஆலயத்துடன் அவதாரம் செய்த கடவுளா! தம்பீ! தம்பீ! என்னை ஏமாற்றிவிட்டாயே...நான் அவரைப் பார்க்கவேண்டுமென்று தினம் இராப்பகலாக ஏங்குவது உனக்கு ஞாபகமில்லையா! அதே ஏக்கந்தானே என்னைப் பிடித்து ஆட்டி பயித்தியமாக்கிவிட்டது...தம்பீ!

அவர் எப்படியிருந்தார்? சொல்லு...சொல்லு...அவர் வேறு ஏதாவது உன்னிடம் பேசினாரா...என்று ஆவலே வடிவமாய்க் கேட்டார்.

பங்களாவில் கோவில் அகப்பட்டது என்றதைக் கேட்டது முதல் அவருடைய நிலைமையே மாறியது. சதா "அவரை நான் தரிசிக்காத பாவியாகிவிட்டேனே...நான் இருக்கும்போது அந்த திவ்ய மங்களமூர்த்தி வெளிப்படாதது, நான் மகா பாவி, அருகதையற்றவன் என்றுதானே ஆயிற்று...எனக்கு அந்த மூர்த்தி இருப்பதாவது தெரிந்திருந்தால் என் கதி இப்படி ஆயிருக்குமா... என்னை இப்படி சோதித்துக் கடன்காரன், ஏழை...என்று பிறர் பரிகஸிக்கும்படி விதி அமைந்திருக்குமா?"...என்று இரவு பகல் ஏங்கியதாலும், கடன் உபத்திரவத்தின் தொல்லையுமாலுமே சித்தம் சிறிது மாற்றமடைந்திருப்பதை ஸ்ரீதரன் அறிவான். ஆதலால்தான் இம் மாதிரி சொல்லி அவரைத் தெளிவுபடச் செய்யவேண்டுமென்று பேராவல் கொண்டு "அப்பா!...அந்த ஆனந்த மூர்த்தியின் அத்புத சௌந்தரியத்தை நேரில் கண்ணாரக்கண்டேன். உங்களுக்கும் அவர் சேவை கொடுப்பதாகச் சொன்னதோடு நீங்கள் கவலைப் படாமல் சந்தோஷமாயிருக்கும்படியும் சொன்னார். அவருடைய தரிசனத்தை உங்களுக்கு வெகு விரைவில் காட்டுகிறேன். இதை யாரிடமும் சொல்லாது ஜாக்ரதையாயிருங்கள். படுத்துத் தூங்குங்கள்" என்றான்.

கிழவ:—அப்பனே....ஸ்ரீதரா...எனக்கும் சேவைகிடைக்குமா! அந்த பங்களாவை வாங்கியவர்தான் நம்மை பரம விரோதியாக நினைத்துவிட்டாரே! அந்த பங்களாவுக்குள் நாம் போக முடியுமா! இது வீண் ஆசைதானே காட்டுகிறாய்" என்று மிக்க தெளிந்த புத்தியுடன் கேட்டது, ஸ்ரீதரனுக்குக் கூறத் திறமற்ற சந்தோஷம் உண்டாக்கியது.

தகப்பனாரைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு "அப்பா! நான் விளையாடவில்லை. சத்தியமாகச் சொல்கிறேன். கடவுள் உங்களுக்குக் காக்ஷி கொடுப்பார். நீங்கள் இனி கவலைக்கு மனத்தைப் பறிகொடுக்காமல் சந்தோஷமாயிருங்கள். நான் போய் மறுபடியும் கடவுளை எப்போது தரிசிக்கலாமென்று பார்த்துவருகிறேன். தூங்குங்கள்" என்று பலவித தைரியங் கூறிப் பின் நகைகளையும் பெட்டியையும் பத்திரப்படுத்தினான்.

கிழவரின் தெளிவு ஸ்ரீதரனை பரமானந்தத்தில் ஆழ்த்தியது. அப்போது பொழுது விடியும் நேரத்தைப் பக்ஷிகள் விளக்கியதால் இனி படுக்க மனமின்றி குளிர்ந்த ஜலத்தில் வெகுநேரம் ஊறி, ஸ்நானத்தைச் செய்து இரவு உண்டாகிய வெப்பத்தைச் சிறிது தணித்துக்கொண்டு பகவானுக்கு பூஜைசெய்து ஜபதபங்களை முடித்துக் கொண்டு இருட்டு பிரிவதற்குள் மறுபடியும் மனது பொறுக்காமல் சந்திரா வசித்த வீதிக்குப் போனான்.

தன்னை நரஸிம்மன் பார்க்காதிருக்கவேண்டுமே என்ற பயம் நடுக்குகிறது. மறுபடியும் திரும்பி அங்குள்ள நதிக்கரையில் உட்கார்ந்திருந்தான். காலைநோம் சிலு சிலுப்பான காற்றும் ஜலக்கரையில் ஆனந்தத் தோற்றமும் கலங்கித்தவிக்கும் மனத்திற்கு ஓர் ஆறுதலாகவிருந்தது.

## 35

உதயமாகும் வேளையில் ஆண்களும் பெண்களுமாக நதிக்கு நீராடவருவதைக் கண்டு எழுந்து சென்ருன். காலை நேரத்து ஆனந்தம் அவன் இதயத்தில் ஒரு ரமணீய எழுச்சியை உண்டாக்கியது. "இவ்வெழுச்சியின் உணர்ச்சியாவது சிறிதுநேரம் மனத்தில் நிலைத்து நின்ருல் அந்த ஆனந்தத்திலாவது சற்று என் கவலையை மறந்திருப்பேன்" என்று நினைத்தவாறே அந்த நதிக்கரை மீதே சற்று உலாவினன்.

மறுபடியும் வெறிபிடித்தவன்போல் வீதிக்குச் சென்ருன். அச்சமயம் சந்திரா இருக்கும் பங்களாவிலிருந்து கார் வெளியேவர அதில் நரஸிம்மன் மட்டும் செல்வதைக் கண்டான். எங்கு செல்கிருர், எப்போது வருவார் என்பது தெரியாததால் பலமான குழப்பத்தினல் தாக்கப்பட்டு நின்ருன்.

கேட்டருகில் ஓடிவந்த ஒரு வேட்டைநாயைப் பிடித்துக் கொண்ட ஆள் நாயைப்பார்த்து, "ஜிம்மீ! உன் எஜமானர் இனி இரவுதான் வருவார். அதுவரையில் சமத்தாய் உன் இருப்பிடம் போய் உட்காரு" என்று கூறிய வார்த்தைகள் தனக்குத்தான் சொல்லியதுபோல் தோன்றி அவன் மனத்தில் பரம ஆனந்தத்தை உண்டாக்கியது. சிறிதுநேரம் ஒன்றும் தோன்ருது குழம்பிக்குழம்பி நின்ருன்.

"எது எப்படியானுலும் சரி. நான் என் கண்மணி சந்திராதேவியைப் பார்த்துவிட்டுத்தான் வருவேன். அதனல் விளையும் விபத்து எதுவாயினும் நான் ஏற்று அனுபவிக்கத் தயார்" என்று மனத்தை வைராக்யப்படுத்திக்கொண்டு கிளம்பும்போதுதான் நாம் முன்னதிகாரத்தில் கூறியபடியே நாகு கோவிலுக்குச் செல்வதையும் கண்டான். அவனை அறியாத ஏதோ ஒரு சக்தி அவன் பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறது; கால்களைத் தானக இழுத்துச் செல்லுகிறது. இதயத்தின் வேகமோ அளவிடமுடியாது. அலைபாயும் மனேசஞ்சலத்துடன் வீட்டுக்குள் சென்று வெகு தைரியமாக பலநாள் பழகியவன்போல் அங்குள்ள வேலைக்காரனை நோக்கி "அம்மா எங்கிருக்கிருர்கள்" என்ருன்.

தினம் பலபேர்கள் இவர்களைப் பார்க்க வருகிறதால் அம்மா மாடியிலிருப்பதாகக் கூறியதை முற்றிலும் கேட்பதற்குள் அவசர மாக மாடிக்குச் சென்று அங்கு காணப்படும் ஒரு அறையின் முன்பு எட்டிப்பார்த்தான்.

அது காலியாயிருக்கக்கண்டு அடுத்த அறையில் பார்ப்பதற்குள் பின்னும் பலவிதமான யோசனையும் பதைப்புங்கொண்டு எட்டிப் பார்த்தான். அவ்வளவுதான்; எத்தனையோ யுகங்களாகப் பசியோடு தவிப்பவனுக்கு தேவாம்ருதவிருந்து கண்முன்பு வந்து காக்ஷியளித்ததுபோலும், குருடனுக்குத் திடீரென்று இரு கண்களும் தெரிந்தால் எப்படி அவன் உள்ளம் பூரிக்குமோ அதேபோலும் ஸ்ரீதரனின் இதயத்தில் கூறத்திறமற்றபேரானந்த வெள்ளம் பொங்கி வழிந்தது. கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக முகத்தில் சந்தோஷ சோபை ஜ்வலிக்கக் கதவருகிலிருந்தே அந்த லாவண்ய பிம்பத்தைப் பார்த்துப் பார்த்து அழகு வெள்ளத்தில் தோய்ந்துப்போய் நின்றான்.

சந்திரா தன் போட்டோவையே வைத்துக்கொண்டு புலம்புவதைக் கண்டதும் இதயம் சுக்கல் நூறாக உடைந்து சிதறியது. அதனால் அதற்குமேல் பொறுமையை வகிக்க முடியாது, உணர்ச்சி எல்லையைக் கடந்து, ஒரே தாவாகச் சந்திராவிடம் சென்று அவளை அப்படியே ஆலிங்கனம் செய்துகொள்ளலாமா என்ற எண்ணம் அதீதமான உத்வேகத்துடன் வரம்புமீறி எழுந்தது.

ஆனால், "நீ அன்னியன்; மனத்தினால் உண்டாகிய களங்கத்தோடு நிற்காமல் தேகத்தினாலும் களங்கத்தை விளைவித்து, ஒரு உத்தமியின் வாழ்க்கையைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்குவது தவறு. பதறாதே! ஸ்ரீதரா! மனத்தைச் சிதறவிடாதே" என்று அவனுடைய மனச்சாக்ஷியே அவனுக்கு புத்தி புகட்டி முன் சென்ற ஆவேசத்தைச் சிறிது பின்னுக்கு இழுத்தது.

எனினும் அவனையும் மீறி "சந்திரா!" என்கிற மொழி, மந்திரம் போல் வெளிப்பட்டதை அவனே அறியமாட்டான். முன்னொரு அதிகாரத்தின் இறுதியில் கூறியபடி இக்குரல் ஒலியைக் கேட்டு ஓடிவந்து காலில்விழுந்த சந்திராவைக் கண்டதும் எத்தனைதான் கட்டுப்படுத்தி வைராக்யத்தை ஊட்டியிருந்தும் ஒரு இமை கொட்டும் நேரத்தில் அவன் இதயம் அதை மறந்து எல்லை மீறி கொந்தளித்துக் காட்டாற்று வெள்ளம்போல் அதிவேகமாக வரும் உணர்ச்சியுடன், "சந்திரா...சந்திரா....எழுந்திரு...என் இன்பக்கனியே! எழுந்திரு" என்று கூறியவாறு தேகம் மயிர்க் கூச்செறிய மார்பு படபடத்து அடிக்க, கைகால்கள் நடுங்க, கால்முதல் தலைவரையில் உஷ்ணம் குபீரென்று தாக்க சந்திராவைத் தூக்கி நிறுத்தி அவளிரு கரங்களையும் கெட்டியாகப் பற்றிக்கொண்டு கண்ணீர் பெருகும் கண்களில் ஒற்றியவாறு...பேச நாவெழாது தம்பித்து நின்றான்.

சந்திரா அடங்காத ஆவேசத்துடன், "ஸ்ரீதர்!...ஸ்ரீதர்! என்னை மன்னிப்பீர்களா! மகா பாவி என்னாலல்லவா உங்கள் வாழ்க்கை

சிதறி பாழாகிப் படுகுழியில் விழுந்தது. என்னைச் சபித்துவிட்டாலும் நான் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வேன். எனக்கு ஒன்றுமே தெரியாது. தாமரையிலை நீர்த்துளிபோல் மனது தத்தளிக்கின்றது. எனக்கு மன்னிப்பு உண்டா! அளப்பரிய அபராதத்தைச் செய்த பாவிக்கு மன்னிப்பு உண்டா?" என்று கதறினள். ஸ்ரீதரன் பதில் பேசவேமுடியாது தவித்தவாறு சில வினடிகள்சந்திராவைப் பார்த்த படியே நின்றான்.

ஒரு க்ஷணநேரம் இருவரிடத்திலும் மௌனம் குடிகொண்டது. பிறகு, ஸ்ரீதரன் சிறிது தெளிந்தவனய், "சந்திரா!...முதலில் நீ சற்று இப்படி உட்காரு. உண்மையில் பார்க்கப்போனல் உன்னிடம் நான் மன்னிப்புக் கேட்கவேண்டும். உனக்குத்தான் நான் மகத்தான துரோகத்தைச்செய்துவிட்டேன்; அதைநான் என்னுயுளில் மறக்கவே முடியாது. என்னை நீ "மன்னித்தேன்" என்று ஒரு வார்த்தை சொன்னல் என்னிதயப் புண்ணுக்கு சிறிது ஆறுதல் அளித்ததாகும்.

ஆனல் உன்னிதயத்தில் அடிக்கும் புசல் காற்றை நான் அறிவேன். உன் முத்தான வாயினல் அம்மாகிரி வருவதை நான் எதிர் பார்க்கமுடியாது. கடவுள் நம்மிருவருக்கு மிடையில் மகத்தான அக்கினி பர்வதத்தை உண்டாக்கி நம்மைப் பிரித்துவிட்டபோதிலும், அந்த கருணாநிதி...நம்மீது அளப்பரிய வாத்ஸல்யத்தைக் காட்டி இச் சந்திப்பையாவது அளித்ததிலிருந்து நம்மை அந்த பரம்பொருள் மன்னித்ததாகவே நினைக்கிறேன். அவனுடைய மன்னிப்புக்கு முன்பு நமக்குள் மன்னிப்புக்கு இடமேது? சந்திரா! என்னைச் சோதிக்கும் பொருட்டு நீ செய்த காரியந்தானே அது?"...என்றான்.

சந்திரா, கண்ணீர் பெருக..."சோதனையா!...ஸ்ரீதர்!... சோதனையா!...என்னிதயத் துடிப்பை அறிந்த தங்கள் வாயிலா இந்த வார்த்தை வருகிறது? சோதனை செய்து நம்மை விதி வாட்டியது உண்மை...ஆனல் எனது கடமையில் ஒரு அணுவளவு செய்தேனேயன்றி சோதனை இல்லை...என் சிறிய தகப்பனரிடம் கடன் செலுத்தத் தாங்கள் வந்திருந்த காலையில் தங்களது திவ்ய தரிசனம் கிடைத்த சந்தோஷத்தைவிட தாங்கள்...என்று முடிப்பதற்குள் ஸ்ரீதரன் பதறியவாறு "என்ன!...நீ என்னைப் பார்த்தாயா!...நிஜமாகவா?" என்று அலறியபடி கேட்டான்.

சந்தி:—ஆமாம். பார்த்ததுமட்டுமில்லை. மகா பாவி நான் அச்சமயம் உங்களுக்கு உதவி புரியமாட்டாது தவித்தேன்...தத்தளித்தேன்...தங்களைத் தனிமையில் சந்திக்க ப்ரம்மப் பிரயத்தனம் செய்தேன். என் பாபம் மலைபோல் மறைத்தது...அந்த மனோ வேதனையிலேயே தவிக்கையில்...மீண்டும் என்னை பகவான் சோதனையில் ஆழ்த்தும்பொருட்டு என் சித்தி வீட்டிற்குப் பக்கத்துவீட்டில் உங்கள் தரிசனத்தைக் காட்டி உடனே மறைத்தார்...

ஸ்ரீதர்:—இதென்ன புதுமை...சந்திரா! நீ அங்கும் என்னைப் பார்த்தாயா,...உன் கண்ணில் பட்டு உன்னைக் கலங்கச் செய்யக்

கூடாதென்று எண்ணி நான் தலைமறைவாகவிருந்ததெல்லாம் இப்படியா முடிந்தது...

சந்:—அந்த ஒரு சிறிய பாக்யமாவது கடவுள் கொடுத்தாரே என்று நான் பேரானந்தமடைகின்றேன்...என் விதி என்னைச் சூழ்ந்து வாட்டுகிறது...அதிருக்கட்டும்...தயவுசெய்து என் கேள்விகளுக்குப் பதிலளிக்கவேண்டும்...தாங்கள் மகா கர்மியான என் சித்தப்பாவின் கடனை எப்படித் தீர்த்தீர்கள்? ராஜாயி வீட்டிலிருந்து எப்படி மறைந்தீர்கள்...தாங்கள் விவாகம் செய்துகொண்டது பற்றி எனக்குப் பரம சந்தோஷந்தான்....ஆனால்...இத்தகைய பரிதாபகரமான ஊமை மனைவியா உங்களுக்குக் கிடைத்தது...ஸ்ரீதர்... என்னால் அந்தக் கண்ராவியைச் சகிக்கவேமுடியாதுபோய்விட்டது—என்று மேலே பேசமாட்டாது விம்மி விம்மி அழுதாள்.

ஸ்ரீதர்:—(ஒரு சோகச் சிரிப்பே சிரித்து சந்திராவைக் கூர்ந்து கவனித்தவாறு) அழாதே....சந்திரா!...அழாதே...பகவான் நான் செய்துள்ள மலைபோன்ற பாபத்தின் மத்தியில் எனக்கோர் சாந்தியையும் மன நிம்மதியையும் அளித்ததற்கு நான் அவரை அனவரதமும் வழிபடுகிறேன். கடன் செலுத்தமுடியாது என் தகப்பனார் தவித்த பரிதாபத்தைக் கூறவே திறமில்லை. அவர் அந்த அவமானத்திற்காகத் தற்கொலையாவது செய்துகொண்டு இறந்து தன்னுடைய லைப்-இன்ஷ்யூரென்ஸ் பணத்தால் கடனடைக்கும் மார்க்கத்தில் மும்முரமாக இறங்கினார். என் மனம் அச் சமயம் எப்படித்தான் துடிக்கும்? கடன்கொடுத்தவர் உனது சித்தப்பா என்பதும் தெரியாது. அவர் காலில் விழுந்து கெஞ்சுவதற்காக வந்தேன். பிறகு ஸாரநாதன்மூலம் உன்னை அவர் அபாரமாக நேசிப்பதாயும் அவருடைய வீட்டில் நீ வந்திருப்பதாயும் உன்னுடைய சந்தோஷத்திற்கு மோட்டார் வாங்குவதற்கே இப்பணம் உதவப்போவதாயும் சகலமும் அறிந்தேன்.

என் மனது பரம சாந்தியை அடைந்தது. என்னால் உனக்கு நேரிடையாய் ஒரு அணுவளவும் சுகமில்லையெனினும் என் கடன் தீர்க்கும் முறையில் நீ சந்தோஷமடைந்தால் போதும் என்று என் ஆத்மா கூறியது. பகவான் அதை ஆமோதித்து அனுக்ரகிப்பது போல் இந்த நொண்டித் தாயாரையும், ஊமைப் பெண்ணையும் என் நினைப்பில் கொண்டு நிறுத்தினார்.

நான் சில வருஷங்களுக்குமுன்பு இவர்களை 'சோலைகிரி' என்கிற ஊரில் பார்த்தது நினைப்புக்கு வந்தது. உடனே ஓட்டமாக அந்த ஊருக்குச் சென்றேன். நொண்டித் தாயாரிடம் 5 ஆயிரம் ரூபாய் ரொக்கமிருப்பதாயும் தன் ஊமைப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு யார் அவர்களை நம்பிக்கையுடன் ஆதரிக்கிறார்களோ, அவர்களுக்குப் பணத்தைக்கொடுப்பதாயும் சொல்லியதை அவளிடமே நினைப்பூட்டி நானே மணப்பதாயும் காப்பாற்றுவதாயும் ஒரு கோயிலின்முன்பு வாக்குதத்தம் செய்துகொடுத்து, அங்கேயே

ஊமையை மனதார மணமும் செய்துகொண்டேன். அந்த நொண்டி என் தாயார் வழியில் தூரத்து பந்துவாதலால் அவள் எங்களை நம்பினள். 5 ஆயிரம் ரூபாயிக்காக அவளைப் பலபேர் ஏமாற்றப் பார்த்தார்களாம். பந்துத்வமிருப்பதால் உடனே இசைந்து என்னையும் காப்பாற்றி என் தகப்பனரின் உயிரையும் காப்பாற்றினள். உடனே பணத்தை உன் சித்தப்பாவிடம் கொடுத்தேன். உனக்குக் கார் வாங்கியதையும் கண்டு களித்தேன். சந்திராவுக்கு இவைகளைக் கேட்கக்கூடமுடியாது துக்கம் பொங்கி வருகிறது. "எனக்குக் கார் வாங்குவதற்காகவா நீங்கள் இத்தகைய பயங்கரச் சுழலில் காலை வைத்தீர்கள்...ஊமை மனைவி...என்று முடிப்பதற்குள் ஸ்ரீதரன் அவளைத் தேற்றி, "சந்திரா!...உனக்குத் தெரியாத விஷயம் என்ன இருக்கிறது? கடவுளின் சோதனைக் காலத்தில் மக்கள் மனத்தைத் தேற்றி சாந்தியையும் நிம்மதியையும் அளிப்பது தீர வைராக்யமல்லவா! அவ் வைராக்கியம் மனத்தில் நிலைத்து வளருவதற்கு சமாதி நிலை போன்ற மௌனம்தானே அவசியம். எனக்கு பகவான் கடன் தீர்க்க வழி காட்டியதற்கு மட்டும் நான் சந்தோஷப்படவில்லை. ஊமை மனைவியைக் காட்டியதற்குத்தான் நான் பரமானந்தமடைகிறேன்.

தன்னுடன் பேசவில்லையே என்று வருத்தப்படமாட்டாள். என் மனப் புயலடங்க நான் எத்தனைக் கதறினலும்...எத்தனைப் பேசினலும் அவள் ஏன் என்று கேட்கமாட்டாள். விவரமும் அறியமாட்டாள். என் விசனம் என்னிடமே அடைக்கலம் புகுந்து கிடக்கும். இத்தனை நன்மைகள் ஒரு சாதாரணப் பெண்ணை நான் மணந்திருந்தால் கிடைக்குமா! சந்திரா!....இதென்ன புலம்பல்... யார் வந்துவிடுவார்களோ! என்ன ஆய்விடுமோ என்கிற தவிப்புடன் நாம் சந்தித்துள்ள சொல்ப நேரத்திலும் என்னுடைய உதவாக்கரையான சரித்திரமா பேசவேண்டும்?...சந்திரா!...ஸாரநாதன் என்னிலும் பல அம்சங்களில் சிறந்தவன்; கண்ணுக்கும் ராஜ வடிவாய் இருக்கிறன்...

சந்திரா காதுகளைப் பொத்திக்கொண்டு..."ஸ்ரீதர்...வேண்டாம்; வேண்டாம்...இந்த வார்த்தைகளை எடுக்கவேண்டாம். என்னுடைய நிலைமையைத் தெரிந்தும் இம்மாதிரி பேசி என்னைத் தாக்கவேண்டுமா! அப்பா சௌக்யமாயிருக்கிறரா?'...என்று வார்த்தையைமாற்றினள்.

ஸ்ரீத:—சந்திரா! உன் மனத்தை வருத்த வேண்டுமென்று நான் பேசவில்லை. உன்னுடைய பெற்றோர்கள் உன்னிடம் வைத்துள்ள வாத்ஸல்யத்தையும் விலையிலா அன்பையும் நீ மறக்காது அவர்களை திருப்தி செய்யவேண்டுமானல் நீ கட்டாயம் ஸாரநாதனை மணப்பதுதான் தருமம்...லக்ஷணம்...கடமை....எல்லாமாகும். இதை உனக்கு வற்புறுத்திக் கூறுவதற்கே நான் வந்தேன் சந்திரா!

சந்:—ஸ்ரீதர்! எனக்கு ஏதோ தலை சுழலுகின்றது. பேசவே முடியவில்லை. இந்த நிமிஷமே என்னுடைய உயிர் நீங்கிவிட்டால்

நான் , பரம சந்தோஷமடைவேன். இனி நான் உண்மையான ஆனந்த நிலையை அடைவதென்று என் ஜன்மத்தில் ஒன்று இருக்கிறது என்ருல்... அது என் மரணந்தான்.

ஸ்ரீத:—சந்திரா!...போதும்...நிறுத்து. எனக்கு இதைக் கேட்பதைவிட வேறு தண்டனை வேண்டாம்...அது கிடக்கட்டும்... வெகு காலத்திற்குமுன்பு களவு போய்விட்ட என் தாயாரின் நகைகளும் என்னுடைய நகைகளும் உனக்கு எப்படி கிடைத்தன?

சங்:—உங்கள் சந்தோஷத்தை அபகரித்துக்கொள்ளும் கள்ளியாக நான் அமைந்து உங்கள் பங்களாவை வாங்கிக்கொண்டேனே, அதே பங்களாவில் உங்களுக்கு உரிமையான சொத்துப் புதையல் கிடைத்தது. களவு போனதாக நீங்கள் கருதியது புதையலாக முளைத்தது. உண்மையாகப் பார்க்கப்போனல் சகல சொத்துக்களுக்கும் நீங்கள்தான் ஜவாப்தாரியாகவேண்டும். அவற்றில் ஒரு சிறிது உங்களுக்களித்துக் களிக்கும்படியான பாக்யமாவது பகவான் எனக்களித்தாரே அதுவே போதும்.

ஸ்ரீதர்:—சந்திரா!...இந்த பேருதவி நீ செய்ததன் பலனல் எனது தரித்திரம் தீர்ந்ததுமட்டுமின்றி என் தாயாரின் நகைகளைக் கண்டவுடனே என் தந்தையின் சித்த பிரப்மை திடீரென்று நீங்கி தெளிவு பெற்றிருக்கும் ஆனந்தந்தான் என்னிதயத்தில் கொந்தளிக்கின்றது. இருப்பினும் நீ அவைகளை உன் பெற்றேர்களுக்குச் சொல்லாமல் கொடுப்பது நியாயமா...

சங்:—ஸ்ரீதர்!...இந்த நியாய அநியாய விவாதங்களுக்கு நான் எதிர்பார்க்கவில்லை. அதைப்பற்றி நான் சிந்திக்கவுமில்லை. பாபமோ, புண்ணியமோ அந்த ஆண்டவனுக்கே அர்ப்பணம்... இதோ! இவைகளையும் நீங்கள் அங்கீகரிக்கவேண்டும்" என்று கூறியவாறு புதையல் தவலையிலிருந்து எடுத்த மற்றும் சில நகைகளைத் தன் பெட்டியிலிருந்து எடுத்துக்கொடுத்தாள்.

ஸ்ரீதரனுக்கு அந்த நகைகளைப் பார்த்ததும் பின்னும் வியப்பாகிவிட்டது. அதுவும் அவன் தாயாரின் நகைகள் என்பதையறிந்ததும் அவற்றைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, அதிலிருந்த ஒரு வைர ஹாரத்தைச் சந்திராவின் கழுத்திலணிவித்து அவளே பிரமிக்கும்படி, "சந்திரா!...என்னுடைய அன்பின் பரிசாகவும், என் தாயின் ஆசீர்வாதச் சின்னமாகவும் இருக்கட்டும். இதை திரஸ்கரிக்காதே" என்று கூறும்போது, முதலில் பொங்கிவந்த ஆவேசம் சிறிது பேச்சுப்பராக்கில் தணிந்திருந்தது. மீண்டும் குபீரென்று கிளம்பி மதியை மயக்கித் தடுமாறச் செய்துவிட்டதால், 'சந்திரா!... நீ சாமான்யப் பெண்ணல்ல...தேவ கன்னிகையோ!...வன மோகினியோ! என் மனமோகினியோ! என்னுடைய துரதிருஷ்டத்தின் அந்தகாரத்தின் மத்தியில் அதைப் பிளந்துகொண்டு சோபிக்கும் மின்னல்கொடி பிரகாசமோ!'...என்று வாய் பிதற்றி

சந்திராவின் சந்திர வதனத்தை அப்படியே இமைகொட்டாது பார்த்துக்கொண்டிருந்தான்.

சந்திரா பதிலே பேசவில்லே. அவளுடைய கண்கள் மட்டும் ஸ்ரீதரனின் எழிலமுதைப் பருகி ஆனந்த நிலேயில் சமாதியாகியது போலிருந்தன...'ஸ்ரீதர்!...இதுதான் நமது கடைசீ சந்திப்பாக இருக்குமென்று என் மனத்தில் தோன்றுகிறது...அப்படித்தான் முடிந்துவிடுமோ! மீண்டும் தரிசனத்திற்கும் பாக்யமற்றுவிடுமோ?'... என்று கூறும்போது தொண்டையில் துக்கம் அடைத்துக்கொண்டது.

"கோயிலுக்குச் சென்ற நாகு எங்கே திரும்பிவந்து பார்த்து விடுவாளோ!" என்கிற பயமும் சந்திராவுக்கு உள்ளூற இருந்தது. 'உபயோகமற்ற விஷயத்தை இரு ஆத்மாக்களின் அந்தரங்கத்துடன் அடக்காது பிறரறியச்செய்வதில் என்ன பயன்?' என்கிற எண்ணம் உதித்ததால் ஸ்ரீதரன் இனி இங்கிருக்கவும் பயந்தாள்; அவனே அனுப்பச்செய்யவும் மனது வராது துடித்தது.

ஸ்ரீத:—சந்திரா! நான் போகிறேன். அதிக நேரமாகிவிட்டது. யாரேனும் பார்த்தால் வீணுக அனுவசியப் பேச்சுக்கு இடமுண்டாகும். நம்முடைய பிராரப்தச்சுழல் எப்படியோ ஆரம்பித்து எப்படியோ கொண்டு முடித்தது. எப்போதாவது பார்க்கும் பாக்யம் கிடைத்தால் என்னேவிடப் பாக்யசாலி உலகிலேயே யாருமில்லே என்று நினேப்பேன். நீ உன் பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாருக எதுவும் செய்யாதே...வீணுக அழாதே! நான் வரட்டுமா?...

சந்:—போகிறீர்களா...இப்போதேவா...

ஸ்ரீத:—உம்....உயிர் போகக்கூடியவனுக்கு அவ்வுயிர் இழுத்து இழுத்துப்போனுல் என்ன? படுக்கென்று உடனேதான் போனுல் என்ன? சந்திரா! மனத்தினுல் உண்டாகிய நமது களங்கத்தைப் பகவான் மன்னிக்கும்படி அவனே இடைவிடாது பிரார்த்திக்கின்றேன். நாம் அடிக்கடி சந்திப்பதில் மனத்தடுமாற்றத்திற்கு அதிக இடம் உண்டாகுமேயன்றி கட்டுப்பாடு தளர்ந்துவிடும். ஆகையால் நான் வருகிறேன்...சந்திரா!...புலம்பாதே...

சந்தி:—நல்லது. போய்வாருங்கள். உங்கள் தாயார் தெய்வமாக இருந்து உங்களேக் காப்பாராக, என் பொருட்டுப் பாழடைந்த உங்கள் வாழ்க்கையின் பரிதாபத்தை மட்டும் நான் எத்தனே ஜென்மம் எடுத்தாலும் மறக்கமாட்டேன்...

இருவருடைய இதயமும் புசல் காற்றில் அகப்பட்டுத் தத்தளிக்கும் மரக்கலம்போல் தத்தளித்துக் கொந்தளித்தன. ஸ்ரீதரன் மகா புத்திசாலியாகையால் மறு பேச்சு பேசாமல் சந்திராவின் கரங்களேமட்டும் எடுத்துத் தன் மார்புற அணேத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு...'சந்திரா! தெய்வச் சம்மதமிருந்து நாம் மறுபடியும் எப்போதேனும் சந்திக்கும் பாக்யம் கிடைக்கும்போது உன்னேயும் உன் கணவனேயும் சேர்ந்து தரிசிப்பேன் என்று நினேக்கிறேன். அதோடு....இனி இம்மாதிரியொரு செயலும் நடக்காது...

இதுவே முதல்தரம், கடைசிதரம் இரண்டுமாகும். நம் வாழ்க்கையிலேயே இனி இம்மாதிரி நிகழாது என்பதை உறுதியாக நம்பு. நாம் வாங்கிக்கொண்டு வந்த வரன் இதுதான்...நான் வருகிறேன்' என்று கூறி அவ்விடத்தைவிட்டு நகர்ந்தான்.

தன்னுயிரையே கவ்விக்கொண்டு போவதுபோல் சந்திராவுக்குத் தோன்றியது....பேசவும் கூடாது துவண்டுபோய்..."ஸ்ரீதர்!...போய் வருகிறீர்களா....ஸ்ரீதர்...இந்தப் பாவியை மறக்காதீர்கள்...மன்னித்துவிடுங்கள்" என்று கூறியவாறு அவன் பின்னாலேயே பதுமைபோல் சென்றாள்.

அடுத்த விநாடியே ஸ்ரீதரன் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு மறைந்து சென்றான்....எங்கும் இருள் சூழ்ந்ததுபோல் தோன்றியது. தான், பால்கனியில் நிற்பதையும் அந்த திக்கில்வைத்த விழியைவாங்குவதையும் மறந்து அசைவற்று நின்றாள். சரீரம் இங்கிருக்கிறதேயன்றி ஆத்மா அவனுடனே சென்றது.

## 36

பெற்ற தாயாயினும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் தர்மசிந்தை உடையவளாயின் தன் மக்களாயினும் அவர்களுடைய குற்றத்தை உணராது போகமாட்டாள். அமிர்தவல்லியம்மாள் நடுநிலைமை வகிக்கும் சீலவதியாகையால் இந்திராவின் கடிதத்தைக் கண்டு மிகவும் மனது கலங்கினாள்.

சந்திராவின்மீது உயிராயிருக்கவேண்டியவள் அனாவசியமாகவன் இப்படியிருக்கிறாள் என்பதை அறிவதற்காகவே, தான் முதலில்போக வேண்டும் என்று அமிருதவல்லியம்மாள் நினைத்து ப்ரயாணமானாள்.

தன்னுடன் முதலில் வரும்படியாக அழைத்துவிட்டு இப்போது விட்டுவிட்டுப் போவது சரியாகுமா! அவளுக்கு முக்யமாக ஏதாவதொரு சாக்குச் சொல்லவேண்டாமா! என்று யோசிக்கும் போதுதான் நரஸிம்மன் இன்ஸ்பெக்ஷனுக்குப் புறப்படவேண்டியதை யறிந்து அவருக்கு உதவிக்கு அனுப்புவதுபோல் சந்திராவை அனுப்பிவிட்டுத்தான் குமாஸ்தாவின் துணையுடன் இந்திராவைப் பார்க்கச் சென்றாள்.

ஸ்டேஷனுக்கே இந்திராவும் சேகரும் தம்பதி சகிதம் வந்திருக்கும் ஜோடிக் காக்ஷி பெத்த மனத்தைப் பூரிக்கச் செய்தது; எனினும் சந்திரா விஷயமான ஒருகளங்கம் மட்டும் குறுகுறுவென்று மனத்தில் அறுத்துக்கொண்டிருந்தது. 'அம்மா' என்று இந்திரா கூப்பிடும்போது சந்திராவின் ஜோடிக்குரலில்லாதது மூளியாகவே தோன்றியது.

கர்ப்பவதியாயிருப்பதால் கண்கொள்ளாத வனப்புடன் விளங்கினாள். மகளைத் தடவிக்கொடுத்து அணைத்துக்கொண்டு ஆனந்தப் பூரிப்புடன் 'நீ தப்புக்கணக்கு எழுதியிருக்கிறாய்; உன்னைப்பார்த்தால் 5 மாதம் நிறைவதுபோல் தோன்றுகிறது...இப்போது ஏதாவது மருந்து சாப்பிடுகிறாயா ?'...என்றாள்.

இந்திரா:—டானிக்குதான் சாப்பிடுகிறேன். அப்பா சவுக்யமா! இப்போது பழயமாதிரி உடம்பு ஒன்றுமில்லையா ! உன்வரவை என் மாமியார் வெகு ஆவலாக எதிர்பார்க்கிறார்.

அமிரு:—அப்பாவுக்கு உடம்பு தேவலை...என்று பதில் சொன்னாளேயன்றி "சந்திராவைப் பற்றி விசாரிக்கக்கூட இல்லையே !" என்று தோன்றியது. அதேசமயம் சேகர் "சந்திராவையும் அழைத்து வருவதாக எழுதினீர்களே, ஏன் வரவில்லை ?" என்றான்.

இந்திராவின் முகத்தில் அசடுதட்டியது. அமிருதவல்லியம்மாள் மகா யூகசாலியாயிற்றே, அந்த சேவையை உணராமலா இருப்பாள். 'கணவனுக்குத் தெரியாது அவள் எழுதிய கடிதத்தைப் பகிரங்கப்படுத்தினால் என்ன நேருமோ !' என்கிற பயத்தால் "வரவில்லை. அவர் இன்ஸ்பெக்ஷனுக்குப் போயிருக்கிறார். கூட சந்திராவையும் தமாஷுக்காவும் தன் பொழுதுபோக்குக்கும் சேர்ந்து அழைத்துச் சென்றார்" என்று மனமொப்பாது மழுப்பினாள்.

எல்லோரும் வீடுவந்து சேர்ந்தார்கள். சம்மந்தியம்மாளுக்கு நடக்கும் உபசாரங்கள் கூறத்திறமில்லை. இந்திராவின் மாமியார் ஆதியில் மருமகள்மீது குறைபட்டுக் கடிதமெழுதியதற்கு மாறாக இப்போது நாட்டுப்பெண்மீது அபாரமான அன்பும் திருப்தியும் கொண்டு பேசியதைக் கேட்டுச் சந்தோஷமடைந்தாள்.

தடபுடல் விருந்துகள் நடந்தபிறகு அமிருதவல்லியம்மாளிடம் சந்திராவின் கல்யாணத்தைப் பற்றி இந்திராவின் மாமியார் ப்ரஸ்தாபித்தாளேயன்றி இந்திரா அதுகூடக் கேட்கவில்லை. கர்ப்பவதியாயிருப்பதால், தான் அவளிடம் சந்திராவைப் பற்றிக் கேட்டால் ஏதாவது கலக்கம் உண்டாகுமோ என்றும் பயந்தாள்.

இருப்பினும் மனது கேட்கவில்லை. அன்று செல்ல மறுநாள் இந்திராவிடம் தனித்திருக்கையில்..."இந்திரா!...வெகு நாட்களாக எனக்கோர் சந்தேகம். அதை உனக்குக் கடிதமெழுதியே தெரிந்து கொள்ள நினைத்தேன். கடிதத்தை யாராவது பார்த்துவிடப்போகிறார்களே என்கிற பயத்தினால் நான் எழுதவில்லை. ஓருயிரும் ஈருடலுமாக இருந்த நீயும் சந்திராவும் ஏன் இப்படி விரோதிகளைப் போலிருக்கிறீர்கள் ? இந்த ரகஸியத்தை அறிவதற்குத்தான் மனம் தவிக்கின்றது. தாயில்லாக் குழந்தை, பரதேசி; அதற்கு உன்னை விட்டால் வேறுயார் இருக்கிறார்கள் ? நீ எதற்காக சந்திராவை வரவேண்டாம் என்று எழுதினாய். உன் மாமியார் பேசுவதைப் பார்த்தால் சந்திராவிடம் அன்பாகவிருப்பது தெரிகிறதேயன்றி நீ

எழுதியதுபோல் வித்யாஸம் தெரியவில்லையே! இதன் காரணத்தை எனக்குத் தெரிவித்துத்தானாகவேண்டும்" என்று கேட்டாள்.

இந்திராவின் நிலைமை தர்மசங்கடமாகிவிட்டது. தன்னைத் தன் தாயாரே இம்மாதிரி கேட்பாள் என்று அவளுக்குச் சற்றும் தோன்றவே இல்லை. திடுக்கிட்டாள். முகம் சவம்போல் வெளுத்தது. அசட்டுக்களை தாண்டவமாட என்ன பதில் சொல்வது என்று கலக்கமும் குழப்பமும் உண்டாகியதால் சிறிதுநேரம் மவுனமாக விருந்தாள். உடனே தன் தாயாரின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "அம்மா! உன் கால்களைப் பிடித்துக்கொள்கிறேன். இதுவிஷயத்தை நீ என்னிடம் கேட்காது விட்டுவிடு. நான் உண்மையைச் சொன்னால் உனக்கு மிகவும் மன அதிர்ச்சியும் தீராத துக்கமும் உண்டாகும். ஆகையால் விட்டுவிடம்மா!" என்றாள்.

அமிருதவல்லியம்மாள் "எது எப்படி இருந்தாலும் சரி; வரப்போகும் வேதனையை அனுபவிக்கவும் தயார். இந்த விஷயத்தை வேரறுத்துவிட்டால்தான் மனது நிம்மதியாகும்" என்று தீர்மான மாக நினைத்ததால் "இந்திரா! எனக்கதனால் எத்தகைய விசனமும் இல்லை. இந்த விஷவிதை எப்படி யார் மனத்தில் விழுந்திருக்கிறது? அதைக் களைந்தெறிந்து வாத்ஸல்யத்தையும் ஒற்றுமையையும் நிலை நாட்டினால்தான் எனக்குத் தூக்கம் வரும். ஆகையால் விஷயத்தை நீ சொல்லியே ஆகவேண்டும்." என்று வற்புறுத்திக் கூறினாள்.

இந்திராவுக்கு மூச்சுத் திணறுகிறது. உண்மைச் சம்பவத்தைக் கூறுவதற்கு முடியாது, நிரபராதிகளான இரு ஆத்மாக்கள் மீதுதான் பழியைக் கூறி தன் பொறாமைத் தீயைத் தணித்துக் கொள்ள எண்ணினாள். "அம்மா! விதியின் விளையாட்டை மதியால் வெல்லமுடியாதெனினும் ஒரு சிறிது தடைமட்டும் போட்டுக் கொள்ளப்பார்க்கலாம். பரதேசிக் குழந்தையை நீ நேசிப்பது போலவே நானும் நேசிக்கிறேன். ஆனால் நேசத்தின் ஜ்வாலையைக் காட்டமுடியாது ஒரு அந்தகாரம் மத்தியில் படர்ந்துமறைக்கின்றது. சந்திராவின் நன்மைக்கே நானும் பாடுபடுகிறேன். என் கண வருடைய மனோபாவம் உனக்குத் தெரியாது. அவருடைய நிலைமை யைத் தெரிந்துகொண்டுதான் நான் அவளைப் பிரிந்திருக்கிறேன். இதோடு பேச்சை விட்டுவிடு" என்று பெரிய வெடிகுண்டு போடுவதுபோல் போட்டாள்.

இதைக் கேட்ட அமிருதவல்லியம்மாளின் உயிர் துள்ளியது. "என்ன! மாப்பிள்ளையின் மனத்தடுமாற்றமா!...உண்மையிலா இந் திரா!...என்று கதிகலங்கிக் கேட்டாள். அவளுடைய மனக் கொதிப்பில் மருமகப்பிள்ளையின் முகத்திலேயே விழிக்கக்கூடாது. அவன் தன் குலத்திற்கு அனுகூலமான மனிதனேயல்ல, அவன் சத்ரு, குலத்ரோகி....என்றெல்லாம் தோன்றி அவனிடம் ஒரு வெறுப்பு உடனே மனத்தில் ஆழமாகப் பதிந்தது.

"சந்திராவுக்கு விரைவில் கல்யாணத்தைமுடித்து அவளைக் கணவனிடம் அனுப்பிவிட்டால் அவளுக்குப் பெரிய பாதுகாப்பு உண்டாகிவிடும். அவளைப் பிறர் பார்க்க ஏது இருக்காது" என்ற எண்ணம் அமிருதவல்லியம்மாளுக்கு அதிகமாகத் தோன்றியதால் தன் கணவனிடம் கல்யாணத்தைப் பற்றி ப்ரஸ்தாபித்தாள்.

ஏற்கெனவே சோகப் பதுமையாகவிருந்த சந்திரா ஊருக்குப் போய்வந்தபிறகு ஸாரமற்ற சக்கையாயும், நடைப்பிணம்போலும் உற்சாகம் என்பது லவலேசமும் இல்லாது காணப்பட்டாள். எந்த நேரம் பார்த்தாலும் ஏக்கமும் பெருமூச்சும் குடிகொண்டிருந்ததேயன்றி சாதாரண நிலைமையே அவளைவிட்டு மறைந்தது.

ஸ்ரீதரன் தன் கரத்தினால் அணிவித்த வைரஹாரத்தை மட்டும் கழட்டவே இல்லை. அதுவும் அவனுடைய கைக்குட்டைகளுமே அவளுக்குத் துணையாகவும், ஆதாரமாகவும் தோன்றின. தனது சந்தோஷத்திற்காக ஸ்ரீதரன் தன் இன்பம் பூராவும் த்யாகத்தைச் செய்து ஒரு ஊமையை மணந்த வயிற்றெரிச்சலைத்தான் அவளால் பொறுக்கவே முடியாது பொங்கிப் பொங்கிவந்தது.

எதிர்பாராத விதம் தனக்குக் கிடைத்த அன்றைய தரிசனமும் சம்பவமும் அவள் இதயத் தகட்டில் ஆணிபோல் பதிந்தது. அதை நினைத்து நினைத்து ஆத்மார்த்தகமாய் ஆனந்திப்பாள். அலங்காரத்தை வெறுத்தும் அனேக நாட்களாயின. தோட்டத்தில் உலாவுவதையும் வெறுத்தாள். எத்தனைக் கெத்தனை ஆதியில் சிரிப்பும் விளையாட்டும் குறும்பு நகைப்பும் நகைத்து வெகு அழகாகப் பேசுவாளோ, அத்தனைக்கத்தனை தனிமையாகவிருந்து மவுனமாய் கற்பனை உலகில் ஸஞ்சரித்து இன்புறுவதிலேயே நாட்டமானாள். மறுபடியும் அந்த திவ்யமங்களாங்க ரூபத்தை தரிசனம் செய்யும் பாக்யம் கிடைக்குமா! என்று நினைக்கும்போது எங்கேயோ புதைந்து அழுந்திக் கிடக்கும் ஆனந்த உணர்ச்சி ஒரு க்ஷணம் அவள் தேகத்தை ஆட்டி அடுத்த வினாடியே நீண்ட பெருமூச்சுடன் ஓய்ந்து போய்விடுவாள்.

இந்த விசித்திரமான மாறுதலைக் காணக்காண அமிருதவல்லியம்மாளுக்கு மனது கலங்கித் தவித்தது. "நம் மருமகன் ஏதோ மகத்தான கொடுமையைக் காட்டி இவ்விளந்தளிரை வாட்டிவிட்டானே பாவி... அதனால்தான் தினத்திற்கு தினம் இத்தகைய ஹீனஸ்திதியை அடைந்துவிட்டாள்போல் தோன்றுகிறது. இவள் மிகவும் புத்திசாலி, மானவதியாதலால், வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை" என்று எண்ணி அவனை நிமிடத்திற்கு நிமிடம் வெறுத்தும் த்வேஷித்தும் வந்தாள்.

மகாபடித்தவன், யோக்யன் என்றெல்லாம் நினைத்து ஏமாந்தோமே; இம்மனிதனின் குணம் இப்படிப்பட்ட கேவலமானது

என்று நினைக்கும்போது தேகம்பற்றி எரிந்தது. இந்த கோலத்தில் மருமகனை விசாரிப்பதோ அவனுக்கு மரியாதை செய்வதோ எல்லாவற்றையும் நிறுத்திக்கொண்டாள்.

சந்திராவின் பரிதாபம் மட்டும் இவள் இதயத்தைப் பிளந்தது. சந்திரா வெகு ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டுப் படுத்திருக்கையில் அமிர்தவல்லியம்மாள் மெல்ல அங்குவந்தாள். சந்திரா கண்ணைத் திறக்காது படுத்திருக்கிறாள்; ஆனால் அவள்விடும் பெருமூச்சுமட்டும் சர்ப்பத்தின் சீற்றம்போல் கேட்பதையறிந்து பரிதாபப்பட்டாள்.

பக்கத்தில் உட்கார்ந்து அவளைத் தடவிக்கொடுத்து "கண்ணா! தூக்கம் வருகிறதா!" என்றாள். அலறியவாறு எழுந்த சந்திரா..."இல்லையே...வெறுமனேதான் படுத்திருந்தேன்" என்று வெகு ப்ரயாஸையுடன் தெரிவித்து உட்கார்ந்தாள்.

அமி:—கண்மணி! நானும் எத்தனையோதரம் ப்ரயத்தனம் செய்தேன். மீண்டும் பின்னடைந்தேன். உன்னுடைய நிலைமையை என்னால் சகிக்கவே முடியவில்லை. நாளைக்குநாள் நீ கேவலம் நோயாளியைப்போலாகிக்கொண்டுவருகிறாய். காரணமும் எனக்குத் தெரியும்...

என்று சொல்லும்போது சந்திராவின் இதயத்தில் திக்கென்று தூக்கிப்போட்டது. "என்ன விஷயம் தெரிந்துவிட்டதோ! ஸ்ரீதாரின் விஷயமாகத்தானிருக்கவேண்டும். ஐயோ!...என்ன செய்வேன்!" என்று க்ஷணநேரத்திற்குள் தத்தளித்து நெருப்பின்மீது பட்ட புழுவெனத் துடித்துவிட்டாள்.

அமி:—கண்ணா! ஏன் இப்படி நடுங்குகிறாய்? உன்னிடம் நிகரிலாத ப்ரேமையை வைத்துள்ள நான் விஷயமறிந்தது பிசகா! பயப்படாதே என் செல்லமே!...என்வயிறு எப்படி கொதிக்கின்றது தெரியுமா! அவனை நான் எனக்கு அனுகூலமாகவே நினைக்கவில்லை. சத்ருவென்றே எண்ணிப் புழுங்குகின்றேன்...

என்று சொல்லிக்கொண்டே போவதைக் கேட்டு சந்திரா பின்னும் இடிந்துப்போனாள். அவளுடைய ரத்த ஓட்டமே நின்றுவிட்டதுபோலாகியது. சரீரம் துவளுகிறது. அமிருதவல்லியம்மாள் சந்திராவைக் கெட்டியாய் பிடித்துக்கொண்டு 'என்கிளியே!... நீ இனி அந்த அல்பனுக்காக சற்றும் பயப்படாதே...அந்த குணங்கெட்ட த்ரோகி உனக்கு நினைத்த பாதகத்தை இந்திராவே என்னிடம் சொல்லிவிட்டாள், எனக்கு மருமகனானால் என்ன! மகனானால்தான் என்ன? மகாபாவி...நெருப்புக்குச் சமானமான உன்னையா....என்று முடிக்கும்போதுதான் சந்திராவுக்கு விஷயம் விளங்கி ஒரு பெருமூச்சு வந்தது.

விலங்கைவிட்டுத் தொழுவில் மாட்டிக்கொண்டதுபோல் ஒரு ரகஸ்யத்தினின்று காத்து ரக்ஷித்த கடவுள் பெரும் ரகஸ்யத்தை உடைத்துவிட்டாரே! இதனால் அக்காவுக்கு என்ன துன்பம்

நேருமோ! நிரபராதியான அவர் மனது என்னபாடுபடுமோ?"...என்கிற குழப்பம் உண்டாகி வதைக்கவாரம்பித்தது.

அமி:—சந்திரா!...என் இப்படி அழுகிருய்?...எனது குணம் உனக்குத் தெரியாதா! நீதான் ரகஸியத்தை என்னிடம் கூருது ஒளித்துவைத்து நீயும் விசனக்கடலில் மூழ்கிருய்; என் மருமகனை யிற்றே என்று சொல்லப் பயந்தாய். நியாயத்திற்குத்தான் என்னிடம் மதிப்பும் மரியாதையும் உண்டேயன்றி அநியாயத்திற்கல்ல. உங்கள் இருவருடைய வாழ்க்கையின் இனிப்பைத் துண்டித்துக் கசப்பு புகுத்திய விஷயமறிந்த பிறகு என்னிதயம் தவிக்கிறது. இனி அந்த அயோக்யனை நான் ஒரு துரும்புபோலத்தான் நினைத்துவிட்டேன். அவனுக்காக நீ இம்மாதிரி பாழாகாதே; அவன் இவ்வீட்டுவழி வருதபடிச் செய்துவிட நானும் அப்பாவும் தயாராயிருக்கிருேம். இதனுல் இந்திராவை நம் வீட்டிற்கு அனுப்பமுடியாது என்றுதானே சொல்லுவான். அவச்யமில்லை; அவள் அங்கேயே சுகமாயிருக்கட்டும். இதுதான் தீர்மானம். அவன் நினைத்த த்ரோகத்திற்குத் தண்டனை அவன் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். உன் காலில் விழுந்து உன்னிடம் மன்னிப்புக் கேட்டாலன்றி அவனை நான் மருமகனுகக் கருதமாட்டேன்...உன்னிடம் அவன் எப்படி நடந்துகொண்டான்? என்ன அடாது வார்த்தைகளாடினுன். உன் மனத்தை இத்தனை அளிந்த புண்ணுக்கியதற்கு அவன் கையாண்ட முறைதான் என்ன? கண்ணு! சந்திரா! சங்கோஜமின்றி நீ கட்டாயம் சொல்லியே ஆகவேண்டும்" என்று ஆவேசம் வந்தவளைப்போல் அடுக்கிக் கொண்டே போனுள்.

'கிணறுவெட்டப் பூதம் கிளம்பியது' என்கிற பழமொழிப் படிக்கு ஆகிவிட்டதே! குற்றம் ஒன்று; மனத்தில் கொண்டது மற்ருென்று, இதென்ன பரிபவம்! ஏதோ விபரீதத்திற்குதான் அக்கா தன் கணவன்மீது இத்தகைய அபாண்டத்தைக் கூறியிருக்கிருள். உண்மையை உரைத்தால் பெருத்த ஆபத்து வந்து மூளும். பொய்யான விஷயத்திற்கு ஒற்று பாடினுல் அத்திம்பேருக்கு நான் மகத்தான துரோகத்தைச் செய்தவளாவேன். அதனுல் இன்னும் என்னென்ன பேராபத்துக்கள் தொடருமோ!...ஐயோ!...இதென்ன சங்கடம்!"....என்று தத்தளித்து உருகுகிருள். பதில் கூறமாட்டாது துக்கம் தொண்டையை அடைத்தது. எதுவரினும் வரட்டுமென்று அங்கு நிற்காது எழுந்துபோய்விட்டாள். இச் செய்கை அமிருதவல்லியம்மாளுக்குப் பெரும் வியப்பாகவிருந்தது.

## 38

"ஸ்ரீமதி சந்திராதேவிக்கு" என்று உரக்கக் கூறி தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்தான். அதை அமிருதவல்லியம்மாளே வாங்கினுள். கலவரம் ஏதுமில்லாதிருந்த காலத்தில்

எல்லாம் நிஷ்களங்கமாகத் தோன்றியது. கலக்கம் உண்டாகிய பிறகு எல்லாம் சம்சயமாயும், அப்படியிருக்குமோ, இப்படி இருக்குமோ என்கிற சந்தேகமாயுந்தானே தோன்றும்.

சந்திராவின் பெயருக்குக் கடிதமென்றதும் ஒரு வேளை தன் மருமகப்பிள்ளைதான் எழுதியிருக்கிருனே என்கிற பெரிய சந்தேகம் உண்டாகியது. அப்படியிருக்குமாயின் அதை வைத்துக்கொண்டே அவளைக் கண்டிக்க எண்ணித் தனியறைக்குச் சென்று கடிதத்தை உடைத்தாள். ஆங்கிலத்தில் டைப்படித்திருந்தது. அமிருதவல்லியம் மாளுக்கும் நன்ருக ஆங்கிலம் படிக்க எழுதத்தெரியுமாதலால் அதைப்படித்தாள். அதன் விவரமாவது:—

"என்ருருயிர்கண்மணி சந்திராதேவிக்கு உபயக்ஷேமங்கள்.

நானும் எழுதவேண்டாம் என்றுதான் எத்தனையோ பொறுமையை வகித்துப் பார்த்தேன். என்னையே அது ஏமாற்றிவிட்டது. என்ருல் இனி ஒரு க்ஷணங்கூட நீ இல்லாது இருக்கமுடியாது. மணமில்லா மலரும், நாதமில்லா வீணையும், நீரில்லா தடாகமும் எப்படி பிறர் வெறுப்பார்களோ, அதே போல் என் இன்பத்திற்கு இணையிலா அமுதமாகிய நீ இல்லாத என் வாழ்க்கையை நானே வெறுக்கிறேன்.

சந்திரா! இனியும் மௌனமும் தாமதமும் வேண்டாம். நானும் என் பெற்ருேர்களும் உங்கள் பெற்ருேருக்குப் பல கடிதங்கள் எழுதினேம். பயனில்லை. ஆசை வெட்கமறியாது என்பதுபோல் நான் உனக்கே எழுதியிருக்கிறேன். என் மனேவேகத்தை நீ இதிலிருந்தே அறிந்துகொள்ளு. உடனே நமது விவாகத்தைப்பற்றி ஏற்பாடு செய்யச்சொல்லு.

கனவிலும் நினைவிலும் உன்னையே எண்ணி ஏங்கும்

ஸாரநாதன்."

இதைப் படித்தவுடன் அமிருதவல்லியம்மாளுக்கு அவளறியாத சிரிப்புதான் பொங்கியது. "இத்தனை அன்பா இருக்கிறது. இன்னும் சில காலம் தாமதித்தால் பையனுக்குப் பயித்தியந்தான் பிடித்து விடுமோ என்னவோ! அசட்டுப் பையன்"...என்று தனக்குள் முணுமுணுத்தவாறு கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டாள்.

ஏற்கெனவே சந்திராவின் மனது சரியாயில்லாத சமயம் இதைக் கொடுத்தால் என்னவாகுமோ என்று தோன்றியதால் அவ் வாறு செய்து, பேசாமல் எழுந்து சென்று சந்திராவை ஒன்றுமே கேட்காது அவளைவிட்டுப் பிடிக்கவே வாளாவிருந்தாள்.

இந்திராவுக்கு வளைகாப்பு செய்ய அழைத்துவர ஏற்பாடுகள் நடந்தன. சந்திராவுக்கு இது மிக்க சந்தோஷம் ஒருபுறம் இருப் பினும் அத்திம்பேர் வந்தால் என்ன செய்வது என்கிற கவலையுண் டாகியது. நல்ல வேளையாக சந்திராவும் அவள் மாமியாரும் மட்டும் வந்தார்கள். வளைகாப்புக் கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தது. சந்திரா வைரவளையல் செய்து தனது பரிசாகக் கொடுத்தாள். இருவ

ரும் ஏதோ ஒரு மாதிரி இருந்தார்களேயன்றி பழய கலகலப்பு எப்படியோ மறைந்துவிட்டது. இவைகளை அமிருதவல்லியம்மாள் கவனிக்காததுபோல் கவனித்துவந்தாள்.

இந்திராவை அழைத்துச் செல்வதற்கு இவர்களே எதிர்பாராத விதம் இந்திராவின் கணவன் சேகர் வந்ததைக் கண்டதும் ஒவ்வொருவருடைய மனத்தில் ஒவ்வொருவிதமாக திடுக்கிட்டு பயமும் வெறுப்பும் சந்தேகமும் உண்டாயின.

அமிருதவல்லியம்மாளின் மனத் துடிப்பில் அந்தம்மாள் மருமகனிடம் பேசவோ, மரியாதை செய்யவோ இல்லை. அலக்ஷியங் கூட செய்வதாகவே அவன் மனத்தில்பட்டது. சந்திரா இங்கிருக்க ப்ரியமின்றி வேண்டுமென்றேஅமிருதவல்லியம்மாள் தன் உறவினர் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

இச்செய்கையால் இந்திரா மெத்த சந்தோஷமடைந்தாள். சந்திராவுக்கு ஒரு புறம் சாந்தியும் ஒருபுறம் மனவேதனையும் உண்டாகியது. சேகர் மிகவும் கெட்டிக்காரன், மகாரோஷக்காரன். வழக்கத்திற்கு விரோதமாக நடப்பதையும் இருப்பதையும் பார்த்து மனது கசந்தது. இந்த விஷ விதையை இப்படியே வைக்கக்கூடாது. இதுவரையில் ஒரு தினுசாக இருந்தது. இப்போது வேர் முற்றிப் படர்ந்திருக்கிறது. இதைக் களைந்தே தீரவேண்டும்'' என்ற ஓர் ரோஷமும் வைராக்யமும் உண்டாகியது.

"இதுவரையில் மாமியார் வீட்டிற்கு வந்தால் மாமியார் காட்டிய அன்பும் மரியாதையும் இருந்த மகிமை என்ன! இப்போது இருக்கும் மாதிரிஎன்ன! சந்திராவைக் கண்ணால் காண்பதற்குக் கூட விடாது பெரியம்மாளும் சேர்ந்து செய்வதால் எனக்குப் பெரிய சந்தேகமாகவே இருக்கிறது'' என்று ஒரு வித்தியாஸம் உதித்தது. அதை வெளிக்காட்டாமல் கோபத்துடனேயே தன் தாயாரையும் மனைவியையும் அழைத்துக்கொண்டு சென்றான்.

முக்கியமான மூலகாரணத்தை ஒருவரும் அறியாதவாறே ஒவ்வொருவருடைய மனத்தில் ஒவ்வொரு விதமான எண்ணங்களும், உத்வேகங்களும் தோன்றி யிருப்பதன் முடிவு என்னவாகுமோ! எப்படிமுடியுமோ! யார் கண்டது?

---

## 39

எந்த நல்ல பழக்கமும் சரி; கெட்ட பழக்கமும் சரி. முதலில் உண்டாவதற்குமுன்பு ஒருவிதமான வைராக்யத்துடன் மனது செல்லுகிறது. ஒருதரம் ஒரு வஸ்துவைப் புசிக்கவோ, பார்க்கவோ செய்துவிட்டால் அதையே மனம் மீண்டும், மீண்டும் நாடிப் பறப்பதும் அதையே எண்ணி ஏங்குவதும் இயல்புதானே!

எத்தனை விசனம் இருந்தபோதிலும் தன்னலத்திற்காகவும் சந்திராவின் நலத்திற்காகவும் இதுகாறும் ஸ்ரீதரன் சந்திராவின் கண்ணில் படாமலேயே இருந்துவிட்டான். அதை ஒருமாதிரி யாகச் சகிக்கும் தன்மையும் உறுதியும் மனத்திற்கு எப்படியோ உண்டாகியிருந்தது. எதிர்பாராதவிதமாகப் பார்க்கவும் பேசவும் மனத்திற்குள்ளே வெடித்துவிடும்போல் விம்மிக்கொண்டிருந்த சங்கடத்தை, உணர்ச்சிப் பெருக்கை தாராளமாக வெளியிடவும், சற்று ஆறுதலேயடையவும் மார்க்கம் உண்டாகிய பிறகு ஸ்ரீதரனின் மனது மேலும் அதையே நாடி நின்றது.

'சந்திரா! சந்திரா!'....என்று இதயத்திற்குள் ஒரு ஆனந்த ஒலி அற்புத கீதம் இசைப்பதுபோல் இசைத்துக் கொண்டே இருந்தது. பிரிய மனமின்றிப் பிரிந்து வந்தான். சரீரந்தான் வீட்டிற்கு வரு கின்றதே யன்றி உள்ளம் கொள்ளைபோயிற்று. பலிகொடுத்த நெஞ்சத்துடன் வீட்டிற்குவந்தான்.

சந்திரா கொடுத்த பணம், நகைகள் முதலியவற்றை முன்பு கொடுத்த நகைகளுடன் வைக்கச் சென்றான். பெட்டியே காணு திருந்ததைக்கண்டு திடுக்கிட்டான். "ஐயோ! இதென்ன மோசம்" என்று ஓட்டமாக ஓடித் தன் ஊமை மனைவியைக் கூப்பிட்டுக் கேட்டான். அவள் பேந்தப் பேந்த விழித்து தனக்குத் தெரியா தென்று தன் பாஷையில் கூறினாள். காணுதுபோன வாநிதியும் தன் கண்மணியால் கிடைத்தும் எப்படிபோயிருக்கும் என்று துக்கித்த வனாய் தகப்பனாரிடம் ஓடினான்.

என்ன ஆச்சரியம்!...சித்தப்ரமை பிடித்துப் புத்திஸ்வாதீன மற்றிருந்த கிழவர், தாடியும், மீசையும் விகாரமாகவிருந்த மனிதர், விலக்ஷணமாக க்ஷவரம் செய்துகொண்டு மிகவும் தெளிந்த புத்தி யுடன் அந்த நகைப்பெட்டியை அருகில் வைத்துக்கொண்டு தன் மனைவியின் நகைகளைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் உதிர்த்த வாறு..."சுந்தரி...மகா பரிசுத்தவதீ...நீ மிகவும் புண்ணியம் செய்தவள். நீ வாழ்ந்த காலத்திலிருந்த சந்தோஷத்தை அனுபவிக் கக்கூட கொடுத்து வைக்காத பயித்தியமாக உன்காலம் முடிந்தது. பிறகோ, கஷ்டகாலத்தைப் பார்க்கச் சகிக்காது உலகையே விட்டு மறைந்தாய். தற்சமயமும் உன் கருணையின் சாயல்தான்—உன் சக்தியின் உத்வேகந்தான்—எங்களைக் காப்பற்றவந்துதவுகிறது இனியாவது நம் கண்மணி கண்ணியமாயும், கவுரவமாயும் வீடு வாசல் பதவி பாக்யங்களுடன் வாழுவானு? நீ மறைந்து அனுக்ரகம் செய்வாயா!" என்று தனக்குத்தானே பேசிப் புலம்புவதைக்கண்டு ஸ்ரீதரனின் இதயம் சந்தோஷத்தால் நிரம்பியது.

ஏற்கெனவே நெஞ்சில் அழுந்திக்கிடந்த விசன இருளையும் பிளந்துகொண்டு தகப்பனாரின் தெளிவினால் உண்டாகிய சந்தோஷம் மின்னல்போல் ஜொலித்தது. இச்சமயம் தான் எதிரில் சென்றால் அவருடைய மனோநிலைமையின் பரிபக்குவம் கலைந்தாலும் கலைந்து

விடும். ஆகையால் ஊமையிடம் இந்த நகைகளையும் பணத்தையுங் கொடுத்து இதையும் அவரிடம் சேர்த்துவிடுவதுதான் சரி" என்று தோன்றியதால் ஊமையிடம் வந்தான்.

அவ்வாறே செய்துவிட்டுத் தான் தனியிடத்திற்குச் சென்று நிம்மதியாகப் படுத்துக்கொண்டான். அன்று பள்ளிக்கூடத்திற்கு லீவாகையால் அதுவும் அனுகூலமாகியது. அன்றுகாலைச் சம்பவங்களையே எண்ணி எண்ணி அந்த உணர்ச்சியுடனேயே படுத்திருந்தான். "சந்திரா எப்போது ஊருக்குப்போகிருள் என்றுகூடக் கேட்காது வந்துவிட்டேனே! அவள் ஊருக்குப் போய்விடுவாளானல் அந்த ஸௌந்தர்ய வதனத்தை இனி எப்போது பார்க்கமுடியும்?" என்ற புதிய ஏக்கம் உண்டாகியது.

மறுபடியும் போய்பார்க்கலாமா! என்றுகூடத் தோன்றியது. ஆனல் அது சரியில்லை. யரேனும் பார்த்துவிட்டால் மிகுந்த ஆபத்தாக முடியுமென்று தன்னையேதான் சமாதானம் செய்துகொண்டான்.

அன்று போஜனத்தை நாடவே இல்லை. ஒப்புக்கும் இலையில் உட்கார அவன் மனம் விரும்பவில்லை. ஆனல் தன் தகப்பனருக்கு மட்டும் அவனே தினம் சாப்பாட்டை ஊட்டுவதுவழக்கம். அவருக்குச் சித்த ப்ரமை உண்டாகிய பிறகு அவருக்குச் சாப்பாட்டில் ஒரு கசப்பு வந்துவிட்டது. அதோடு சதா தன் மனைவியைப்பற்றிப் பேசி, தங்களது பங்களாவில் புதைந்து கிடந்த கோயில் வெளிப்பட்டதைக் கேட்டதுமுதல் அந்த ஸ்வாமியையும், தரிசனம் செய்யவேண்டும்; பிறகுதான் சாப்பிடுவேன் என்கிற ஒரு பிடிவாதம் செய்துவந்தார்.

ஸ்ரீதரன் அந்த கோயில் ஸ்வாமியும் அம்மாவும் சேர்ந்துதான் சாப்பாடு கொடுத்தனுப்பியதாக தினம் பொய்யைச் சொல்லி சாப்பாட்டை ஊட்டிவந்தான். இன்றும் அதேபோல் ஊட்டுவதை மறந்தேபோய்விட்டான். பகல் வெகு நேரமாகியபிறகு திடீரென்று நினைத்துக்கொண்டு எழுந்து உள்ளேபோனன்.

நொண்டி மாமியார் பரிதாபம் தேங்கிய குரலுடன் "தம்பீ! மணி மூணடிக்கப்போகிறதே. இன்னமும் உனக்குப் பசி எடுக்கவில்லையா! நேற்று ஒரு புண்யவதி மகாலக்ஷ்மியைப்போல் வீட்டிற்குவந்து சென்ற வேளை ஏதோ மந்திர சக்தியைப்போல் உன் பிதாவுக்குத் திடீரென்று தெளிவு உண்டாகியிருக்கிறது. இன்று தானகவந்து சாப்பாடு போடச்சொல்லி சாப்பிட்டுச் சென்ற அதிசயத்தைக் கூறவே முடியாது. அவருக்கு நல்லது உண்டாகியதென்றால் நீ இப்படி பட்டினி கிடக்கிறாய். நீ சாப்பிடாது உன் மனைவி சாப்பிடவில்லை. நீங்களிருவரும் பட்டினி கிடக்க எனக்கு எப்படி சாப்பாடு பிடிக்கும்? என் தம்பீ! உனக்கு உடம்பு ஏதாவது சரியில்லையா! உண்மையைச் சொல்லு. நேற்றுவந்தது யார் என்பதுவும், இந்த பணம் ஏது என்றும் உனக்கு நிஜமாகத் தெரியுமல்லவா! என்னிடம் சொல்லக் கூடாதா! உன் மனைவிக்குத்தான்

கேட்க வாயில்லை. என்னால் கேட்காதிருக்கவும் முடியவில்லை. இது என்ன ரகஸியம்?'' என்று கேட்டாள்.

இம்மாதிரி இவள் கேட்கக்கூடும் என்பதை அவன் முன்பே நினைத்திருந்தான். ஆதலால் தயங்காமல்...''மாமீ! உண்மையில் இது பரம ரகஸியம். பிறரிடம் சொல்லாதே. என் தகப்பனார் பிறர் கடனுக்குக் கையொப்பமிட்டதன் பலனாகவன்றோ எங்கள் கதி இப்படியாயிற்று. அதோடு என் தாயாருடையவும் என்னுடையவும் நகைகள் அடகுவைத்து முழுகிப் போய்விட்டன.

கூட்டுக் கையெழுத்து வாங்கி மோசம் செய்த மனிதருடைய புதல்வி தந்தையின் மோசத்தை உணர்ந்து தன் சொந்த பணத்தில் கடனுக்கான பணத்தையும் கொடுத்ததோடு முழுகிப்போன நகைகளையும் மீட்டுவந்து கொடுத்தாள். அந்தம்மாளுடைய தர்ம குணத்திற்குத்தான் உலகத்தில் மழைபெய்கிறது. எல்லாம் நல்லகாலத்தின் அறிகுறி. கடனாகிவிட்ட அவமானத்தினால்தானே அப்பாவுக்குச் சித்த ப்ரமை உண்டாகியது. அந்த கவலை நீங்கியதும் தானாகக் குறைந்துவருகிறது. எல்லாம் ஆண்டவனின் செயல். இந்த ரகஸியத்தை வெளியில் சொல்ல வேண்டாம்'' என்று வெகு பொருத்தமாகக் கூறினான்.

இதுகேட்ட நொண்டிக்கு வியப்பும் திகைப்பும் அதிகமாக உண்டாயின. ஆண்டவனின் கருணை தன்பாலும் தன் ஊமைப் பெண்ணின் பாலும் இருந்ததனால்தான் நமக்கு ஒரு ஆதரவு காட்டும் வகையில் இவர்களை சோதித்தான். இனி அந்தஸ்து வந்துவிட்டதனால் கொடுத்த வாக்குதத்தத்தை மறந்துவிடுவானோ...ஸ்ரீதரன் அத்தகைய மனிதனா! இல்லை; இல்லை. சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவன் பிரமாணத்தை மீறமாட்டான். ஒரு வேளை ஐச்வர்யம் வந்துவிட்டதினால் எங்களை நிர்க்கதியாக்கிவிடுவானோ?'...என்று நினைக்கும் போது அவள் இதயம் துணுக்குற்றது. புதிய கவலையொன்று புகுந்துகொண்டு வாட்டத்தொடங்கியது.

## 40

இந்திராவுக்கு தங்களுடைய பூர்வீக கிராமத்திலேயே அதி விமரிசையாக ஸீமந்தம் நடத்த அவள் மாமியார் மாமனார்கள் தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகள் செய்தார்கள். அமிருதவல்லியம்மாளும் தடபுடலான சீர் வரிசைகளுடன் சென்றாள். ஆனால் சேகரனுக்கு வாங்கவேண்டிய வேஷ்டி, வைரமோதிரம் முதலியவைகள் எல்லாம் வெகு குறைவாயும் இளப்பமாயும் வாங்கியதோடு அவன்மீதிருக்கும் ஆத்திரத்தில் சந்திராவை அழைத்துச் செல்லாது போனாள்.

ஏற்கெனவே புகைந்துகொண்டிருக்கும் சேகருக்கு சந்திராவை அழைத்துவராததும் தன்னை அவமானப்படுத்துவதுபோல் பெண்ணுக்குமட்டும் பிரமாதமாகப் பந்தலில் செய்துவிட்டு மருமகனுக்கு மட்டந்தட்டியதையும்கண்டு அவன் ஆத்திரம் அதிகமாயிற்றேயன்றி குறையவில்லை.

வளைகாப்புமுதல் சேகர் இந்திராவிடம் பழயமாதிரி வெகு தாராளமாகப் பழகியும் பேசியும் விளையாடுவதில்லை. ஒருமாதிரியாகவே இருந்தான். அன்று அவன் மனது தாங்காது இந்திராவை நோக்கி, "இந்திரா! ஏதோ விபரீதத்திற்குத்தான் தற்சமயம் சம்பவங்கள் நடக்கின்றன. உன்னிடம் பலதரம் கேட்டும் நீ சரியானபடி தெரிவிக்கவில்லை. இத்தனை மனிதர்கள் வந்திருக்கையில் உன் சகோதரி மட்டும் ஏன் வரவில்லை? இதைச்சொன்னால்தான் ஆயிற்று" என்று சற்று கண்டிப்பான குரலிலேயே கேட்டான்.

காமாலைக் கண்ணனுக்கு எதைப் பார்த்தாலும் மஞ்சளாகத்தானே தெரியும். அந்த வகையில் சந்திராவைப்பற்றி இவன் கேட்டது முற்றும் விபரீதமாகவே தோன்றியதால் இன்னும் கோபமும் உள்ளுக்குள் ஆத்திரமும் பொங்கியது. "இன்னும் அவன் புத்தி மாறவில்லையே!" என்று தோன்றியதேயன்றி சாந்தமும் சத்தியமும் எங்கோ மறைந்தன.

கேட்டதற்குச் சரியாய் பதில் சொல்லாது, "எனக்குப் பக்ஷிகளைப்போல் இறக்கை இருக்குமாயின் நான் பறந்துபோய் அந்த மகா தேவியை ஏன் வரவில்லை என்று கேட்டுக்கொண்டுவந்து இந்த திவ்ய சமூகத்திற்குத் தெரிவித்திருப்பேன். எனக்கு சிறகு இல்லையே!" என்று கண்களில் க்ரூரம் ஜ்வலிக்கக் கூறினாள்.

சேகர் இவ் வார்த்தையில் விபரீதமான விஷம் தேங்கிக் கிடப்பதை அறிந்து, இதயம் துடித்தது. "உம்...குறைபடாதே. சிறகு இல்லாமலேயே நீ பக்ஷிகளைவிடக் கேவலமாகப் பறக்கும்படி பகவான் கருணைபுரிவார்" என்று ஒரே வார்த்தை கூறிவிட்டு விர்ரென்று போனான். அதோடு விட்டுவிட அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. நேரே மாமனாரிடம் சென்று "இத்தனை பேர்கள் வந்திருக்கையில் உங்கள் சந்திராமட்டும் ஏன் வரவில்லை?" என்றான்.

நரஸி:—கோவில் பிரஸாதம் எல்லோருக்கும் சொந்தம் என்று நினைப்பதுபோல் அவளை சில அல்பர்கள் எண்ணியிருக்கும் ரகஸியத்தை அவள் அறிந்திருக்கலாம். அதனால் அவள் எங்குமே போவதில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டிருக்கிறாள். அவள் வராததால் ஸீமந்தம் நிற்கவில்லையே! அழகாகவே நடந்தேறியது—என்று வெடுக்கென்று சொன்னார்.

சேகர்:—ஓ! அப்படிப்பட்ட மனிதர்கள்கூட இருக்கிறார்களா? சரிதான்...ஸீமந்தம் யார் வராவிட்டாலும் நின்றிருக்காது. நீங்கள் வராதிருந்தால்கூட ஸீமந்தம் நடந்தே இருக்கும். அது நிற்காது.

பதிலுக்கு வேறு சில அப்சங்கள் நின்றுவிடலாம்—என்று கூறிக் கொண்டே போய்விட்டான்.

இதைக் கேட்டுக்கொண்டு வந்த அமிருதவல்லியம்மாளுக்கு மனது திடுக்கிட்டது. "என்னவிருப்பினும் நாம் பெண்ணைப் பெற்ற வர்கள், அவனிடம் முரட்டுத்தனமாகப் பேசலாமா! நீங்கள் ஏன் இப்படி அசட்டுத்தனமாக சொன்னீர்கள்? உடம்பு சரியில்லை என்று ஏன் சொல்லக்கூடாது? இதனால் இந்திராவுக்கு ஏதாவது துன்பம் நேரிட்டால் என்ன செய்வது? வாயினால் சொல்லுவதில் என்ன லாபம்? செய்கையிலல்லவா காட்டவேண்டும். இனி இம்மாதிரி ஆத்திரப்பட்டுப் பேசவேண்டாம்."

என்று கணவனுக்கு நியாயம் கூறினாளேயன்றி சேகர் சந்திராவை ஏன் வரவில்லை என்று தலாதலா கேட்பதில் விபரீதமான சந்தேகமேகொண்டாள். அந்த வகையில் இந்திராவுடன் இவள் மனதும் போட்டியிட்டது.

## 41

அவளுடைய இதயத்தில் பொங்கியெழும் உணர்ச்சியை எடுத்துக் கூற வாய் ஒன்றுமட்டும் கொடுக்காமல் பகவான் அவளை வஞ்சித்துவிட்டானே யன்றி உலகத்திலுள்ள மற்றவர்களைப் போன்ற சகலவிதமான ஆசைகளும் உணர்ச்சிகளும் அவளுக்கும் உண்டல்லவா!

ஏதோ காலக்கொடுமையின் கூற்றால் தன்னை இந்த மன்மதன் மணந்தானே யன்றி இல்லையேல் அவன் வீட்டுவேலை செய்யத் தனக்கு லாயக்கு உண்டா! என்றதை அபலையான ஊமையின் உள்ளம் சதா நினைத்ததனால்தான் அவனுடைய நிழல்போலவே இருந்து பணிசெய்து இன்புற்றுவந்தது. தனக்கு பெரும் நிதியைத் திரட்டிக் கொண்டுவந்து கொடுத்ததானது அதிர்ஷ்ட சூரியன் உதயமாகிவிட்டான் என்று அவள் பூரித்தாள்.

ஆனால் அடுத்தவினாடியே அந்த சூரியனையும் கருமேகம் மறைத்துவிட்டது போன்றும் வாழ்க்கையின் ஜோதிமங்கி இருள் கவ்விக்கொண்டது போன்றுமான விசனத்தையே அடைந்தாள்.

ஸ்ரீதரனின் மாறுபாட்டைக் காணக்காண மேற்குறித்த சந்தேகமும் விசனமும் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்தன. தனக்கு அதிர்ஷ்டம் ஏன் வரவேண்டும்? ஒரே நிலையில் தரித்திரமே இருக்கக்கூடாதா? என்று கூட எண்ணினாள். தன் கணவன் கட்டாயம் தன் நொண்டித் தாயையும் விட்டுவிடுவானே! நமக்கு அதோகதி

யாகிவிடுமோ! என்கிற ஏக்கம் ஊமையின் உள்ளத்தை வாட்டத் தொடங்கியது.

ஆனல் இந்த உணர்ச்சிகளைச் சொல்லி ஆறுவதற்கும் சஞ்சலம் தீருவதற்கும் வாய் உண்டா? அந்த பாக்யம் இந்த ஜன்மத்தில் கிட்டாத ஊமைச்சியாய் பிறந்துவிட்டாளே.

நொண்டியின் மனத்திலும் இதே எண்ணங்கள் கடல் அலைகளைப்போல் புரண்டுபுரண்டுவருகின்றன. தாயும்மகளும் இந்த ஏக்கத்திலேயே வாடிவதங்கி உத்ஸாகம் குன்றி ஏக்கம் பிடித்தவர்கள் போலாகிவிட்டார்கள். ஸ்ரீதரனிடம் இதைப்பற்றி நொண்டி கேட்பதற்கும் நினைத்தாள். ஆனல்...மன்மதன்போன்று அதி சௌந்தர்யத்துடன் வாலிபம் ததும்ப ப்ரகாசிக்கும் யௌவன வீரனுக்குத் தன் ஊமைப்பெண் எவ்விதத்திலும் தகுந்தவளல்ல என்பதை அவள் உள்ளமறியவில்லையா!....“எதற்கும் பகவானிருக்கிருன். என்ன நடக்கிறதோ பார்க்கலாம்?” என்று மனத்திற்குள்ளேயே புதைத்து வைத்துக்கொண்டு நடைச் சவம்போல் இருந்தாள்.

ஸ்ரீதரன் நொண்டிக்கு ஒரு நொண்டிச் சமாதானம் சொல்லி விட்டானே யெனினும் நொண்டிக்கும் ஊமைக்கும் உண்டாகியிருக்கும் புதியபயமும் சந்தேகமும் இவனுக்குத் தெரியாமல்போகவில்லை.

மாமியாரின் கண்ராவியைவிட ஊமையின் பரிதாபந்தான் அவன் இதயத்தைத் துளாவியது. வாய் பேசமாட்டாத குறையுடன் ஊமை தன்னைக் கெஞ்சும் பாவனையில் பார்த்தும், அக்கண்களில் அவளது இதயத்துக்குள் கொந்தளிக்கும் விசனம் பூராவும் ஜ்வலிப்பதையும் அவள் “என்னை கைவிட்டு விடுவாயா!” என்று ஏங்கிப் பார்ப்பதும் ஸ்ரீதரனின் நெஞ்சை அள்ளித் தின்கிறது. ஊமையினிடத்தில் அவனுக்கு அலைகடந்த பச்சாத்தாபமும் ஐயோ பாவம், என்கிற இரக்கமும் சுறந்தன வெனினும் சந்திராவிடம் பறிகொடுத்த இதயத்திலிருந்து அங்கிகரிலாத ப்ரேமையை அள்ளிக் கொடுக்க மட்டும் அவனல் முடியவில்லை. அவனது பரிசுத்தமான இதயக் கோட்டையை முற்றுகையிட்ட பெருமை, தனித்த சர்வாதிகாரத் தன்மை மட்டும் சந்திராவுக்கே உரித்தாகிவிட்டதை அவனல் இந்த ஜன்மாவில் மாற்றமுடியுமா! பரிதாபத்தால் கண்ணீர் உதிர்த்தான். தான் செய்த வாக்குதத்தத்தை மீறுவதில்லை என்கிற உறுதியை அவர்களுக்குத் தெரிவித்து தேற்ற முன்வந்தான்.

நொண்டியிடம் வாங்கிய 5000 ரூபாயை எடுத்து வட்டியுடன் கொடுத்து, “மாமீ! இதோ உன் பணம்; இதை நீயே பத்திரமாக முன்மாதிரி வைத்துக்கொள்ளு. நான் பணத்தைத் திருப்பிக்கொடுத்துவிட்டதனலேயே உங்களுக்கு அன்று செய்த வாக்குதத்தத்தை மறந்துவிட்டேனென்ருே, மீறிவிட்டேனென்ருே நினைக்காதே. இந்த சரீரத்தில் இந்த ஆத்மா இருக்கும்வரையில் உங்களை நான் கைவிடமாட்டேனென்று அன்று நான் கோயிலில் சத்தியம் செய்ததை இன்றும் உறுதிப்படுத்தியே கூறுகிறேன்.

அன்று முதல் நீங்களும் உங்கள் மகளும் என்னிடம் அவநம்பிக்கையாயும் மனத்தில் வித்யாஸமாயும் இருப்பதை நான் உணராமலில்லை. என்னுடைய பேராபத்தான நிலைமையில் காத்த உங்கள் உதவியைவிட எனக்குப் பணம் பெரிதல்ல. உங்களிருவருக்கும் நான் அன்று செய்த சத்யத்தை மீறவேமாட்டேன்.

உன் பணம் உன்னிடமிருக்கட்டும். அவசியம் வரும்போது வாங்கிக்கொள்ளுகிறேன். என்னை நம்புங்கள். நான் மோசக்காரனல்ல" என்று உறுதியாகக் கூறி பணத்தைக் கொடுத்தான். ஆனால் நொண்டி அதைத் தொடவும் மறுத்து கண்ணீர் வழிய "ஸ்ரீதரா!... எங்களை நீ நிர்க்கதியாக்கிவிட்டால் எங்கள் இருவருடைய பரிதாபத்தையுங் கண்டு ஆதரித்து அணைக்க இந்த ஊர் நதி இருக்கிறாள். அதைத் தவிர வேறுவழியில்லை. உன்னையே நம்பி உயிர்வாழும் உயிர்களை அகால மரணத்திற்கு ஆளாக்காதே. உன்னுடைய அழகிற்கும் திடீரென்று உண்டாகிய செல்வத்திற்கும் நீ இருக்கவேண்டிய நிலைமையே வேறுதான். உனக்கேற்ற ரதிதேவியை நீ உன்னிஷ்டப்படி மணந்தாலும் மணக்கலாம். ஆனால்...தன்னுள்ளத்தில் கொந்தளிக்கும் உணர்ச்சிகளைக்கூடப் பேசச் சக்தியற்ற பேதைப் பெண்ணை...ஊமைச்சியை நிராசையாக்காதே...அவளை நிர்க்கதியாக்காதே"...என்று மனமுடைந்து கூறினாள்.

ஸ்ரீதரனின் மனது கரைந்தது. ஊமையை இதுவரையில் கையால் தொட்டறியாத அவன் உள்ளம் உணர்ச்சி மீறிய வேகத்துடன் நொண்டியின் கண்முன்பு ஊமையின் கைகளைப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு "நீ பயப்படாதே...நான் உன்னைக் கைவிடமாட்டேன். கண்ணீர்விடாதே...மாமீ! என்னை உணர்ச்சியும் தர்ம சிந்தனையும் உள்ள மனிதன் என்று நினைத்துக்கொள்ளு.

"அற்றகுளத்தில் அருநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்-அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்போலவே
ஒட்டி உலர்வார் உறவு"

என்ற பாட்டின் முதல் பாகத்தைச் சேர்ந்த மனிதன் நானல்ல. இரண்டாம் வர்க்கத்தைச்சேர்ந்தவன் என்பது நினைவிருக்கட்டும். இனி இதையே மனத்தில் வைத்துக்கொண்டு இருவரும் புலம்பவேண்டாம். வாக்குதத்தமென்பது ஒன்றேயன்றி இரண்டுமூன்றல்ல. சத்தியமும் தர்மமும் என்னை என்றும் நிலையில் நிறுத்திக் காக்கும். கவலைப்படாதே...என்று பெருமிதமான உணர்ச்சியுடன் கூறிச்சென்றான்.

ஊமையின் உள்ளம் ஆனந்தத்தினால் பூரித்தது. நொண்டிக்குக் கேட்கவேண்டுமா; ஸ்ரீதரனின் குணத்தை அவ்விரு உள்ளங்களும் மெச்சி வாழ்த்தின. அந்தப் பேதைகளின் சந்தோஷத்தைக் கண்டு ஸ்ரீதரனின் உள்ளமும் ஒருமாதிரி திருப்தியை அடைந்தது. தன் தகப்பனாரின் தெளிவைக் கண்டு பின்னும் ஆனந்தம் பொங்கியது.

இன்னும் கூடிய சீக்கிரத்திலேயே முற்றிலும் குணமாகி பழய மாதிரி ஆகிவிடவேண்டும் என்று பகவானை பிரார்த்தனை செய்தான்.

எத்தகைய மாறுதல்கள் உண்டாகியபோதிலும் இதய கமலத்தில் வீற்று சதா காக்ஷி கொடுக்கும் சந்திராவை மட்டும் மறக்க முடியாது தவித்தான். மறக்கமுயன்றதெல்லாம் வீணாகியது.

## 42

இந்திராவின் ஸீமந்தத்திற்கு எல்லோரும் போய்விட்டதால் சந்திரா மட்டுந்தான் வீட்டிலிருந்தாள். தன் சகோதரியின் கல்யாணத்தைக் கண்டு களிக்க ஆசை உள்ளுக்குள் அடித்துக் கொண்டதெனினும் அவளுடைய மனோபாவத்தை நன்கறிந்திருப்பதால் போகாதிருந்ததே நலமெனத் தோன்றியது. ஆனால் 'இந்திரா பிரஸவத்திற்கு வந்தால் சுமார் ஆறுமாத காலமாவது இங்கிருக்க நேருமே! அப்போது என்ன செய்வது?' என்கிற கவலை இப்போதே பிடித்துத் தின்னவாரம்பித்தது.

உண்மையை அறியாது தன் தாயார் சேகர்மீது வித்யாஸமாக எண்ணி நடப்பது சந்திராவுக்குப் பெரும் பயமாகத் தோன்றியது. எனக்கு எத்தகைய கஷ்டங்களை உண்டாக்கியபோதிலும் என் இந்திராவுக்கும் அவள் கணவனுக்கும் அவளுக்குப் பிறக்கப்போகும் சிசுவுக்கும் ஒரு குறைவுமின்றி க்ஷேமமாகவிருந்தால் போதும். என்று மனப்பூர்வமாக எண்ணினாள்.

"இத்தனை நேரம் அக்கா ரதி தேவியைப்போல் மணையிலிருப்பாள். இத்தனை நேரம் கச்சேரி நடக்கும்"....என்றெல்லாம் யோசனை செய்துகொண்டு பொழுதைக் கடத்தினாள். சோகப் பதுமையாய் உட்கார்ந்திருக்கையில் சந்திராவுக்கு ஒரு கடிதம் வந்தது. அதன் கவர்மீதிருந்த எழுத்துக்களே இவளுக்குப் பேரானந்தத்தைக் கொடுக்கும் ஜீவாமிருதமாக இருந்ததால் ஆவலுடன் உடைத்துப் படிக்கவாரம்பித்தாள்.

'சௌபாக்யவதி, சந்திராதேவிக்கு, சர்வமங்களமுண்டாகுக.

முறை தவறி நான் கடிதமெழுதுவது குற்றமாகக் கருதலாம்; ஆனால் உங்கள் பங்களாவுக்குள் நேரில் வர பலவித எண்ணங்களால் தடைபட்டுவிட்டதால் கடிதமெழுதுகிறேன்.

சந்திரா! உனது விலையிலா அன்பின் மகிமையினால் என் தந்தைக்கு நன்றாகக் குணமாகிவிட்டது. எனினும் உங்கள் அமிருத பவனத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை தரிசிக்கவேண்டுமென்கிற பிடிவாதமான ஆசையால் என் தகப்பனார் இரவு பகல் பிதற்றுகிறார். தானாக எழுந்து தனியே அங்கு ஓடி வருவதற்குக்

கிளம்பிவிடுகிறார். பிடித்து நிறுத்தி சமாதானம் செய்ய முடியவேயில்லை. என்று திடீரென்று ஓடி வந்துவிடுவாரோ, அதனால் உனக்கு என்ன நேர்ந்துவிடுமோ! என்று பயமாயிருக்கிறது. அந்த தரிசனம் கிடைக்காவிட்டால் அவருக்கு மறுபடியும் பயித்தியமே பிடித்துவிடுமோ என்று திகிலாயிருக்கிறது. உங்கப்பாவுக்கு எங்கள்மீதுள்ள கோபத்தில் என் பிதா அங்கு வந்து தரிசிக்க சம்மதப்படவேமாட்டார் என்பதும் எனக்குத் தெரியும். கும்பலோடு கும்பலாக வந்து தரிசனம் செய்து போகவும் நினைத்தேன்.

எங்கள் போதாக்காலக் கொடுமை, அதுவும் அவருக்குத் தெரிந்து பலர் முன்னிலையில் என்னை அவமானப்படுத்தியது போல் அவரை அவமானப்படுத்தினால் கிழப் பிராணன்—ஏற்கெனவே நொந்த உள்ளம்-இதைத் தாங்காது போய்விடுமோ என்கிற பயத்தினால் உனக்கு எழுதுகிறேன். நீ எங்கள் மீதுள்ள வாஞ்சையால் ஒரு சமயத்தைத் தெரிவித்தால் என் பிதாவுடன் நானும் வருகிறேன். நீ செய்துள்ள மகத்தான பேருபகாரத்தினால் நாங்கள் இப்போது இதே ஊரில் சொந்த வீடு வாங்கிக்கொண்டு பழய கௌரவத்தில் ஓரளவு பெற்று வாழுகிறோம். பள்ளிக்கூட வாத்தியார் வேலையை விட்டுவிட்டு பாங்கியில் வேலையிலிருக்கிறேன். என் நொண்டி மாமியார் ஊமை மனைவி, எல்லோரும் சௌக்யம். உன் பதில் பாங்கி விலாஸத்திற்கு எழுதவும், நீ க்ஷேமமாயிருப்பாயென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,
ஸ்ரீதரன்."

கடிதத்தைப் படித்துப் பேரானந்தமடைந்த சந்திரா திரும்பத் திரும்பப் படித்தாள். "இளமையின் விகாரமோ...பழய மனோபாவத்தில் சாயலோ...ப்ரேமையின் ஜ்வாலையோ...எதுவும் ஒரு சிறிதும்கூட காட்டாது எத்தனை உயர்வாயும் மேன்மையாயும் எழுதியிருக்கிறார்...என்ன மனோ பரிபக்குவம்! எத்தனை கம்பீரம்! அடாடா!...அவருடைய சொந்தமாளிகைக்கு வந்து எல்லோருக்கும் பொதுவான பகவானை தரிசிப்பதற்கா இத்தனை பீடிகை?

உம், என்னால்கூட அவருக்கு ஒரு காரியம் ஆகவேண்டியிருப்பதைக்காண என்னுள்ளம் பூரிக்கின்றது. என் பாக்யத்தால் எனக்கு அவருடைய தரிசனம் அடிக்கடி கிடைக்க மார்க்கம் செய்வதற்கேபகவான் இந்த சம்பவத்தை உண்டாக்கினார்போலிருக்கிறது.

இப்போது என்னுடைய நிலைமை தர்மசங்கடமாகி விட்டதே. அவரை வரும்படியாக எழுதிவிடுவது வெகு சுலபந்தான். ஏற்கெனவே என் பிதா அவரை சபையிலேயே தன் கோபத்தைக் காட்டிப் பேசியவர் இப்போது தன் வீட்டிலே பார்த்தால் என்ன சொல்வாரோ! ஏற்கெனவே அதைப்பற்றி அவர் பயந்தவாறே எழுதியிருப்பதற்கு நான் என்ன விதமாக பதில் சொல்லமுடியும்.

ஐயோ! அவர் வீட்டிற்கு அவர் வருவதற்கும் இத்தனை விபத்தா! என் பதில் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பாரே; நான் என்னவிதமான பதில் எழுதுவேன்?" என்று தாமரையிலை நீர்த் துளிபோல் தத்தளித்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு மீண்டும் கடிதத்தைப் படித்தாள். படிக்கப் படிக்க புதிய புதிய உணர்ச்சிகளை அள்ளி வீசுவதைக் கண்டு பூரித்தாள். "என்ன வைராக்யம்! ப்ரேமை வெள்ளமாகி ஓடிக்கொண்டிருந்த இதய வேகத்தை எப்படியோ கட்டுப்படுத்தி எழுதியிருக்கும் ஆச்சரியம் பூரிக்கின்றது" என்று பலவாறு எண்ணமிட்டபடியே சிறிதுநேரம் மௌனம் சாதித்தாள். அம்மௌனத்தின் மறைவில் அவளுக்கோர் விதமான தைரியமும் துணிவும் மனவுறுதியும் பளிச்சென்று பிறந்தன. அதே விசையில்,

"அன்புமிக்க நண்பருக்கு,

வாடி உலர்ந்து எரிந்துபோகும் பயிருக்கு கவலைப் பாய்ச்சும் நீரோ, ஏற்றத்தில் இறைக்கும் நீரோ—கிடைப்பினும் அது சாகாமல் உயிர் வாழ்வதற்கு சாதனம் கிடைத்ததை எண்ணி மகிழ்வதே போல் என்னுள்ளம் உங்கள் கடிதத்தால் மகிழ்ந்தது. நான் கேவலம் பேதையாக விருப்பினும் தங்களைப்போல் எழுதும் திறமை மங்கி உள்ளத்தில் கொந்தளிக்கும் அலைகளே பொங்கிவந்து கடிதத்தில் சிதறிவிடுகின்றன. அதற்காக மன்னிக்கவும். தாங்கள் இன்றுமுதல் என்று வேண்டுமாயினும் மாலை 4 மணிமுதல் 5 மணிக்குள் தங்கள் தந்தையின் சகிதம் வந்து எம்பெருமானை தரிசிக்கலாம். தோட்டத்துக் கதவு திறந்திருக்கும்படி ஏற்பாடு செய்கிறேன். என் தந்தையினால் எவ்வித துன்பமும் நேராமல் பார்த்துக்கொள்ளுகிறேன். ஆண்டவன் இதற்கு உதவி செய்வான் என்றே நம்புகிறேன். இந்த சந்தர்ப்பத்திலாவது தங்களைத் தரிசிக்கும் பாக்யம் கிடைக்கும்படிச் செய்த பகவானை மனமாறத் துதிக்கின்றேன். தாங்களும் தங்கள் பிதாவும் வந்து போவதே என் பிதாவுக்குத் தெரியவேண்டாம்.

இங்ஙனம் தங்கள்,

சந்திரா."

183074

என்று எழுதி முடித்துப் பேனாவை வைத்துவிட்டுக் கவரை எடுப்பதற்காகத் திரும்பினாள். கொடிய எரிமலையே தன் தலையில் புரண்டு விழுந்துவிட்டதுபோல் ஒரு துள்ளு துள்ளினாள். அவளை மீறிய பயத்தில் மேஜைமீது திறந்துகிடக்கும் கடிதங்களை மூடி வைக்கவும் கைகள் நடுங்கின. அவளை அத்தகைய சங்கடத்தில் தவிக்கவைத்த உருவம் வேறு யாருமில்லை. அவளுடைய தமக்கையின் புருஷனாகிய சேகரனேயாவன். ஐயோ பாவம்! பரிதாபம் நிறைந்த பேதைப் பெண்ணின் இதயம் எப்படித்தான் துடிக்கும் என்பதை விவரிக்கமுடியுமா!...சந்திராவின் சரீரம் துவண்டு ஆடியது.

## புதிய வருடத்தில் "மோகினி"

புதிய வருடத்தில் மோகினி உங்களுக்கு அளிக்கப்போகும் விருந்து—(1) ஸ்ரீமான் பி. ஸ்ரீ. அவர்களின் "ஜகன்மோகன கோபாலன்" தொடர் கட்டுரைகள். (2) ஸ்ரீமதி குகப்பிரியையின் "சரித்திரப் பெண்மணிகள்" பலரைக் குறித்த சிறு கதைகள் (3) "தமிழ்நாட்டு ஸ்திரீ எழுத்தாளர்கள்" என்ற தலைப்பில் வாழ்க்கைச் சித்திரங்கள் (4) ரஸமான சிறுகதைகள், கட்டுரைகள் ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள், ஸ்ரீ. ஜானம்மாள் உள்பட பலர் எழுதியவை.

## தாமதிக்காதீர்கள்

அடுத்தமாதத்து இதழ் புதிய வருஷ சந்தா செலுத்தியவர்களுக்குத்தான் அனுப்பப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-வது பக்கத்திலடியிலுள்ள விளம்பரத்தை கவனித்து, நேரில் சந்தா அனுப்புவோர் தாமதிக்காது சந்தாதாரராகச் சேரவும். ஏஜண்டிடம் ஆர்டர் கொடுப்போரும் தங்கள் பிரதிகளுக்கு முன்னதாக ஆர்டர் செய்யவும்.

தங்கள் நன்றியுள்ள,

*வை. மு. கோதைநாயகி.*

## நினைவிருக்கட்டும்

சென்னை அன்பர்களின் சௌகரியத்திற்காக நமது திருவல்லிக்கேணி காரியாலயத்தில் ஸ்ரீ பி. வி. டி. ஸ்வாமி அவர்கள் தேவையானதை மகிழ்ச்சியுடன் செய்யச் சித்தமாயிருக்கிறார். புதுவருட சந்தாவுக்கும் ஆண்டு மலருக்கும் சேர்த்து ரூ. 2-12-0 (ரிஸர்வேஷன் கூபனுடன்) அவரிடம் செலுத்தி, ரசீது பெற்றுக்கொள்ளவும். மலருக்கு மாத்திரம் பணம் கட்டுவோர் ரூ. 1-6-0 உடன் கூபனைக் கொடுக்கவும். உங்களுக்கு வேண்டிய பிரதிகளை "ரிஸர்வ்" செய்து 1-1-43ல் வெளியான உடனே கிடைக்கும்படிச் செய்வார். நமது இதர பிரசுரங்களும் அவரிடமே கிடைக்கும்.

**காலை 7 மணி முதல் 9 மணிவரை; பகல் 12 மணி முதல்**
**மாலை 7 மணிவரை நமது காரியாலயத்திற்கு விஜயம்செய்யவும்**

## நமது ஏஜண்டுகளிடம்

ஆர்டர் கொடுக்கும் அன்பர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தொகைப் பிரகாரமே பணம் செலுத்தவும். நவம்பர் இதழில் வெளியிட்ட "ரிஸர்வேஷன் கூபன்" உபயோகிக்கப்படவேண்டும்.

தாமதித்தால் விலை அதிகமாகும்

தாமதிக்காமல் உடனே முந்துங்கள்

தாமதித்தால் காபி கிடைக்காது.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, VENKATAPURAM, SINGAPERUMAL KOIL, B. O.

1-1-43 ரூ. 1-8.

# ஜகன்மோகினி 20வது ஆண்டுமலர்

## நமது மலரை சிறப்பித்து மணங் கமழச் செய்யும் பிரபலஸ்தர்கள்

**நமது சிறந்த தலைவர்கள்** — ஸ்ரீ. சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார்; டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்.

**கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள ப்ரமுகர்கள்** — ஸ்ரீ. எஸ். வையாபுரிப்பிள்ளை (தமிழ் பேர்ராசிரியர், சென்னை சர்வகலாசாலை); ஸ்ரீ கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் (சரித்திர ஆசிரியர், சென்னை சர்வகலாசாலை); ஸ்ரீமதி ஸகோதரி சுப்பலக்ஷ்மி அம்மாள் (ஸ்ரீ சாரதா வித்யாலயம்); பண்டிதை கிருஷ்ணவேணி அம்மாள் (லேடி வில்லிங்க்டன் கல்லூரி); ஸ்ரீ வி. கே. சௌரிராஜன் (சென்னை ஹிந்து ஹைஸ்கூல்); ஸ்ரீ. ரா. ஸ்ரீ. தேசிகன் (சென்னை ராஜதானிக் கல்லூரி); ஸ்ரீ வி. வி. ராமானுஜன் (லயோலா காலேஜ்).

**இலக்கிய பேராசிரியர்கள்**—அபினவஸரஸ்வதி பண்டிதராஜ ஸ்ரீ. நடாதூர் கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி; ஸ்ரீ பி. ஸ்ரீ. ஆசார்ய; ஸ்ரீ. வரகவி திரு அ. சுப்ரமணிய பாரதியார்; ஸ்வாமி சுத்தானந்த பாரதியார்; நாமக்கல் ஸ்ரீ. ராமலிங்கம் பிள்ளை; ஸ்ரீ டாக்டர் வி. எஸ். நடராஜன்; "இனியன்";

**ஸங்கீதம்** — ஹரிகதாரத்தினம் காயனபடு கீர்த்தனபடு ஸ்ரீமதி ஸி. சரஸ்வதிபாய்;

**வெள்ளித்திரை திலகங்கள்** — ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள்; காமெடியன் ஸ்ரீ எல். நாராயணராவ்;

**பிரஸித்திபெற்ற எழுத்தாளர்கள்** — ஸ்ரீ. ப. சம்பந்தமுதலியார்; ஸ்ரீ. ஜே. ஆர். ரங்கராஜு காரு; ஸ்ரீ "கொனஷ்டை"; ஸ்ரீமதி "குமுதினி"; ஸ்ரீமதி "குகப்ரியை"; ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்; ஸ்ரீ ஜானம்மாள்; ஸ்ரீ. வை. மு. ஸ்ரீ.; ஸ்ரீ. ஏ. கே. செட்டியார்; ஸ்ரீ. வி. ஆர். எம். செட்டியார்.

**சிறு கதை ஆசிரியர்கள்** — ஸ்ரீமதி கே. சாவித்திரி அம்மாள்; ஸ்ரீமதி ஸி. ஆர். ஸரோஜா; ஸ்ரீ. எஸ். என். குப்புராஜன்; ஸ்ரீ. கே. ரங்கநாதன், ஆறுமுகநேரி; ஸ்ரீமதி ஏ. வி. ராமன்; ஸ்ரீ எம். ஸி. ஸ்ரீநிவாஸன்; ஸ்ரீ பி. வி. திருவேங்கடஸ்வாமி; ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மீ ஸ்ரீநிவாஸன்; ஸ்ரீமதி வி. ரங்கநாயகி; ஸ்ரீமதி ஸாவித்ரி ராஜன்.

**பல அழகிய கலர் படங்கள் உங்களை மகிழ்விக்கும்**

**ஷை நிகரற்ற விருந்துகளைத்தவிர, உணர்ச்சி மிக்க ஒரு முழு நாவல்.**

## ஸ்ரீமதி வை. மு. கோ.வின் வைர விழா நாவல்

**10 அழகிய கலர் படங்களுடன்**

# க்ருபாமந்திர்